பலப்படுத்துதல்


# AGNZ NATIONAL CONFERENCE 2026

ASSEMBLIES OF GOD
CHURCHES IN NEW ZEALAND INC

ஜெபமும் உபவாசமும்
திங்கட்கிழமை, 31 ஆகஸ்ட்
ஞாயிற்றுக்கிழமை, 20 செப்டம்பர்

# TAMIL

## ஜெப வழிகாட்டி




# Kia Ora

அன்பிற்கினியவர்களே,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், சமாதானமும், பலமும் உங்களோடு இருப்பதாக.

நிர்வாகக் குழுவின் சார்பாக, இந்த 21 நாள் ஜெப முயற்சியில் நீங்கள் அர்ப்பணிப்புடன் பங்கேற்கிறதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய நிர்வாகக் குழுவாக, நமது ஊழியத்தின் தாக்கத்தையும் பரப்பையும் இரட்டிப்பாக்கும் இந்தப் பயணத்தில் நாம் இப்போது கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக நடந்துவருகிறோம். எருசலேம் ஆலோசனைச் சபையின் வார்த்தைகளை மேற்கோள் காட்ட வேண்டுமெனில், “இது எங்களுக்கும் பரிசுத்த ஆவிக்கும் நலமாகத் தோன்றியது”. அதைப் போலவே, நாம் தற்போது கடந்து செல்லும் இந்தக் காலம் விசுவாசிகள், தலைவர்கள் மற்றும் உள்ளூர் சபைகளை “பலப்படுத்துவதற்காக” அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

பிலிப்பியர் 4:11b–13 இவ்வாறு அற்புதமாக அறிவிக்கிறது:

> “நான் எந்த நிலையில் இருந்தாலும் மனத்திருப்தியாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்த நிலையில் இருப்பதையும் அறிந்திருக்கிறேன்; வளமாய் வாழ்வதையும் அறிந்திருக்கிறேன். நிறைவிலும், பசியிலும், செழிப்பிலும், பற்றாக்குறையிலும், எல்லா சூழ்நிலைகளிலும் வாழும் இரகசியத்தைக் கற்றுக்கொண்டேன். என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே நான் எல்லாவற்றையும் செய்ய முடியும்.”

அப்போஸ்தலன் பவுல் உறுதியுடனும், தனது வேதனை நிறைந்த தனிப்பட்ட அனுபவத்தின் அடிப்படையிலும், தேவனுடைய பலத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தான் “அறிந்திருந்தேன்” என்று எழுத முடிந்தது. அதுவே, எந்தச் சூழ்நிலையிலும் நிலையான மனத்திருப்தியோடு வாழ அவரை வழிநடத்தியது. நாமும் நம்மைச் சுற்றியிருப்போருக்கு நம்பிக்கையின் ஒளியாக இருப்பதற்காக, தேவன் இதே அனுபவத்தை நமக்கும் அளிக்க விரும்புகிறார்.

ஆனால், இதையும் நான் சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன்—இதற்கு எளிய குறுக்கு வழி எதுவும் இல்லை.

சில நேரங்களில் நாம் ஒவ்வொருவரும் பற்றாக்குறையின் மத்தியில் இருப்பதையும், தாழ்த்தப்படுவதையும், இனி கொடுக்க எதுவும் இல்லை என்று உணரும் நிலையையும் சந்திக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட நேரங்களில்தான் தேவனை முழுமையாக நம்புவதற்கும், அவரால் மட்டுமே செய்யக்கூடியதை அவர் செய்ய அனுமதிப்பதற்கும் அவர் நம்மை அழைக்கிறார். அப்பொழுது நாமும் அதிக தைரியத்தோடு,

“என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே நான் எல்லாவற்றையும் செய்ய முடியும் (இன்னும் கற்றுக்கொண்டிருக்கிறேன்)”

என்று சொல்ல முடியும்.

தேவன் தமது அளவற்ற இரக்கத்தினாலும், நீடிய பொறுமையினாலும், வல்லமையினாலும் நம்மை நிரப்புவாராக. நாம் விடாமுயற்சியுடன் ஜெபித்து, அவர்மேல் நம்பிக்கையுடன் நிலைத்திருக்கும்போது, எல்லாமே சாத்தியமே என்பதை அறிந்து, அவர் நமக்குள் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் பெருகப்பண்ணுவாராக. இந்த 21 நாட்கள் சிறப்பு ஜெபக் காலம் உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக அமையட்டும். தேவன் உங்கள் எல்லா எதிர்பார்ப்புகளையும் மீறி கிரியையாற்றுவாராக.

ஆமென்.



டெரி பிராட்லி
பொதுக் கண்காணிப்பாளர் (General Superintendent)
Assemblies of God New Zealand

## திங்கட்கிழமை, 31 ஆகஸ்ட்

# நாள் 1

**ஏசாயா 40:28–31**

**“உனக்குத் தெரியாதோ? நீ கேள்விப்படவில்லையோ? கர்த்தர் நித்திய தேவன்; பூமியின் எல்லைகளையும் படைத்தவர். அவர் சோர்வடைவதுமில்லை, களைப்படைவதுமில்லை; அவருடைய ஞானத்தை ஆராய்ந்து அறிய முடியாது. அவர் சோர்ந்தவர்களுக்கு வல்லமையையும், பலவீனமானவர்களுக்கு அதிக பலத்தையும் கொடுக்கிறார். இளைஞர்களும் சோர்ந்து களைப்படைவார்கள்; வாலிபர்களும் இடறி விழுவார்கள். ஆனால் கர்த்தரை நம்பி எதிர்பார்க்கிறவர்கள் புதுப் பெலன் அடைவார்கள்; அவர்கள் கழுகுகளைப் போலச் சிறகுகளை விரித்து உயரப் பறப்பார்கள்; அவர்கள் ஓடினாலும் சோர்வடையமாட்டார்கள்; நடந்தாலும் களைப்படையமாட்டார்கள்.”**


**ஜெபம்**

- பரிசுத்த ஆவியானவரே, நாங்கள் எங்களைத் தாழ்த்தி, எங்கள் வாழ்வின் மேல் உமக்குள்ள வல்லமையையும் அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்கிறோம். எங்கள் இருதயங்களை அமைதிப்படுத்தி, எங்கள் சிந்தனைகளை உமது சந்நிதியில் அடக்குகிறோம். இந்த ஜெபம் மற்றும் உபவாசத்தின் நாட்களில், நீரே உமது இறையாண்மையின்படி எங்களை வழிநடத்துமாறு வேண்டுகிறோம்.
- உம்மைச் சந்தித்து, எங்கள் உள்ளத்தின் ஆழத்தில் உம்மை இன்னும் நெருக்கமாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதே எங்கள் இருதயத்தின் ஆவலும் ஜெபமும் ஆகும். நாங்கள் ஒன்றுகூடி உம்மை எதிர்பார்த்து காத்திருக்கும்போது, எங்கள் சபைகளின் நடுவே உமது பலப்படுத்தும் வல்லமையோடு கிரியையாற்றும்படி வேண்டுகிறோம்.
- பரலோகப் பிதாவே, புதியதாக உமது குரலைக் கேட்க எங்கள் செவிகளைத் திறந்தருளும். நீர் யார் என்பதையும், உமது இரக்கத்தின் நன்மைகளையும் மறந்துபோனதற்காக எங்களை மன்னியும்.
- எங்கள் சொந்த பலத்தில் வாழ்ந்ததின் விளைவுகளாகிய எங்கள் பலவீனத்தையும் சோர்வையும் உம்முன் அறிக்கையிடுகிறோம். நாங்கள் தைரியமாக அறிவிக்கிறோம்: **“நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆ்ஃப் காட் சபைகளின் நம்பிக்கை இயேசு கிறிஸ்துவே. எங்கள் நம்பிக்கை வேறு எந்த அடித்தளத்தின் மீதும் அல்ல; கிறிஸ்துவின் மீதே உறுதியாகக் கட்டப்பட்டுள்ளது.”**

**உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்**

- உங்கள் ஊர் அல்லது நகரத்தில் வாழும் **தாய்மார்கள், தந்தையர்கள் மற்றும் குடும்பங்களின் மேல் தேவனுடைய ஆசீர்வாதத்தை அறிவியுங்கள்.**
- **நியூசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள்** (MPs) மற்றும் நாடாளுமன்ற அமைப்பில் பணியாற்றுகிற அனைவரையும் தேவனிடம் ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள். உங்கள் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்காக மன்றாடுங்கள்.
- வரவிருக்கும் **தேர்தல்** தேவனுடைய பாதுகாப்பின் கீழ் நடைபெறும்படி ஜெபியுங்கள். நீதியும் நேர்மையும் கொண்ட ஆண்களும் பெண்களும் நியூசிலாந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும்படி வேண்டுங்கள்.
- எங்கள் இயக்கத்தில் ஆண்களை ஊக்குவித்து வழிநடத்தி வரும் **பாஸ்டர் ஃப்ரீடம் ஐகா** (Ps Freedom Aiga) அவர்களுக்காக ஜெபியுங்கள். தங்கள் குடும்பங்களில், அண்டை அயலாரிடத்தில், சபைகளில் மற்றும் பணியிடங்களில் தேவனைப் பிரதிபலிக்கும் ஆவிக்குரிய வல்லமையுள்ள ஆண்களை தேவன் எழுப்புவாராக என்று வேண்டுங்கள்.
- கீழ்க்காணும் மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்:
  **ஜூலியன் மற்றும் மோனிகா ஹாக்கன்** (சீனா ஊழியம் – தற்போது நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்கள்)
  **ராபர்ட் மற்றும் மார்கரெட் ஹன்ட்** (பிலிப்பைன்ஸ் ஊழியம் – தற்போது நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்கள்)
  **பால் மற்றும் ஜங்-டே லீ** (துருக்கி ஊழியம்






## செவ்வாய்க்கிழமை, 1 செப்டம்பர்

# நாள் 2

1 சாமுவேல் 30:3-8

தாவீதும் அவனோடிருந்த மனுஷரும் சிக்லாக்கிற்கு வந்தபோது, அந்தப் பட்டணம் நெருப்பினால் எரிக்கப்பட்டிருந்ததையும், அவர்களுடைய மனைவிமார்களும், மகன்களும், மகள்களும் சிறைபிடித்துக்கொண்டு போகப்பட்டிருந்ததையும் கண்டார்கள். அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுவதற்கு இனி வல்லமையில்லாதவர்களாகும் வரைக்கும் உரத்த சத்தமிட்டு அழுதார்கள். தாவீதின் இரண்டு மனைவிகளாகிய யிஸ்ரயேலியளான அகினோவாமும், கர்மேலியனாகிய நாபாலின் விதவையான அபிகாயிலும் சிறைபிடிக்கப்பட்டிருந்தார்கள். ஜனங்கள் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனங்கசந்து, தாவீதை கல்லெறிந்து கொல்லப்பேசினதால், தாவீது மிகவும் துக்கமடைந்தான். ஆனால் தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைப் பலப்படுத்திக்கொண்டான்.

பின்பு தாவீது அகிமெலேக்கின் மகனாகிய ஆசாரியன் அபியத்தாரை நோக்கி: "ஏபோதை என்னிடத்தில் கொண்டுவா" என்றான். அபியத்தார் அதைத் தாவீதினிடத்தில் கொண்டுவந்தான். அப்பொழுது தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்து: "இந்தக் கொள்ளைக்காரரை நான் துரத்திப் போகலாமா? அவர்களைப் பிடிப்பேனா?" என்று கேட்டான். கர்த்தர்: "துரத்திப்போ; நீ நிச்சயமாக அவர்களைப் பிடித்து, எல்லாவற்றையும் மீட்டுக்கொள்வாய்" என்று பதிலளித்தார்.

ஜெபம்

- கர்த்தராகிய இயேசுவே, எங்கள் சபைகளின் இயக்கத்திற்கு நீர் அருளியுள்ள ஊழியத்திலும் எழுப்புதலிலும் (Mission & Revival) உள்ள கூட்டுப் பங்கிற்காக உம்மைத் துதிக்கிறேன்.
- சிலுவையில் நீர் பெற்றுத் தந்த மகத்தான வெற்றிக்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். உலகம் கேட்டதிலேயே சிறந்த நற்செய்தியை என் சமூகத்திற்கு எடுத்துச் செல்லும் அதிகாரத்தையும் வல்லமையையும் எனக்குக் கொடுத்ததற்காகவும் உமக்கு ஸ்தோத்திரம். என் பலம், இயேசு கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் வெளிப்பட்ட நற்செய்தியிலிருந்தே வருகிறது என்று நான் அறிக்கையிடுகிறேன். மேலும், "இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியானது விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் இரட்சிப்பை உண்டாக்குகிற தேவனுடைய வல்லமையாகும்" என்ற என் விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறேன்.
- நாங்கள் ஒன்றுகூடி அறிவிக்கிறோம்: எங்கள் பரலோகப் பிதா நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் இயக்கத்தைத் தமக்காகத் தனியே பிரித்தெடுத்திருக்கிறார். நாங்கள் ஒன்றிணைந்து கூட்டுறவை உருவாக்கவும், விசுவாசத்தின் துணிச்சலான பயணங்களை மேற்கொள்ளவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய வல்லமையில் பலப்படுத்தப்பட்டவர்களாகவும், அவரால் அனுப்பப்பட்ட ஜெயங்கொள்ளுகிறவர்களாகவும், எல்லா மொழிகளையும், எல்லா இனத்தாரையும் சென்றடைய அழைக்கப்பட்டிருக்கிறோம்.
- மேலும் நாங்கள் அறிவிக்கிறோம்: இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை நாம் பகிர்ந்து கொள்வதன் மூலம், 2033 ஆம் ஆண்டிற்குள் ஆட்டியரோவா (நியூசிலாந்து) முழுவதும் நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் இயக்கத்தின் தாக்கமும் பரவலும் இருமடங்கிற்கும் அதிகமாக பெருகும். எங்கள் இயக்கம் எங்கள் தேசத்திற்கும், உலகின் பிற சபை இயக்கங்களுக்கும் ஆசீர்வாதத்தின் ஊற்றாக இருக்கும்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  உங்கள் ஊர் அல்லது நகரத்தில் உள்ள வணிகத் துறையினருக்காக ஜெபியுங்கள். தேவன் அவர்களுக்கு ஞானம், நேர்மை மற்றும் செழிப்பை அருளும்படி வேண்டுங்கள்.
  நியூசிலாந்தின் ஊடகங்கள், ஒலிபரப்பாளர்கள் மற்றும் செய்தியாளர்கள் உண்மையையும் நீதியையும் நிலைநிறுத்தும் பணியில் தேவன் அவர்களை வழிநடத்தும்படி ஜெபியுங்கள்.
  கீழ்க்காணும் மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்:
  அவி மற்றும் ராபின் மணி (துருக்கி) M மற்றும் D M (ஆசியா / துருக்கி)
  கெவின் மற்றும் டெனிஸ் ரீட் (நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்கள்)

புதன்கிழமை, 2 செப்டம்பர்

# நாள் 3





யோசுவா 1:9

“நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே; நீ போகிற இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.”

ஜெபம்

- பரலோகப் பிதாவே, எங்கள் சமூகங்களுக்குப் பேசும்படி நீர் எங்களுக்குக் கொடுத்துள்ள உயிரும் வல்லமையும் நிறைந்த வார்த்தைக்காக, அதையும் தைரியத்தோடும் அதிகாரத்தோடும் அறிவிக்கத் தந்த பலத்திற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். பரலோகத்தில் இருப்பதுபோல பூமியிலும் உமது சித்தம் நிறைவேறும்படி, உமது நாமத்தில் கட்டவும் அவிழ்க்கவும் எங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை உணர்ந்து செயல்பட உதவுமாறு வேண்டுகிறோம்.
- பரிசுத்த ஆவியானவரே, எங்களைப் பலப்படுத்தும். எங்கள் வாயினால் பேசப்படும் உமது வார்த்தை, ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாகவும், இருதயத்தின் நினைவுகளையும் எண்ணங்களையும் ஆராய்கிறதாகவும் இருந்து, கேட்போரின் உள்ளங்களைத் தொடுவதாக.
- நாங்கள் விசுவாசத்தோடு அறிவிக்கிறோம்: வரும் ஆண்டுகளில் எங்கள் எல்லாச் சபைகளிலும் முழு சுவிசேஷம்—வார்த்தையாலும் செயல்களாலும்—அறிவிக்கப்படும். இயேசு கிறிஸ்துவின் சிலுவையையும் உயிர்த்தெழுதலையும் அதிகாரத்தோடும் வல்லமையோடும் அறிவிக்கும் பிரசங்கத்திற்குப் பின்பாக அடையாளங்களும் அதிசயங்களும் தொடர்ந்து நடைபெறும்.
- பரிசுத்த ஆவியானவரே, அவிசுவாச உலகத்திற்கும் உமக்கும் இடையில் நிற்கும் மத்தியஸ்தர்களாக எங்களை உருவாக்கியதற்காக உம்மைத் துதிக்கிறோம். எங்களைப் போதித்து வழிநடத்தும். எங்கள் ஊர்களிலும் நகரங்களிலும் உள்ள ஒவ்வொரு சபையும் ஜெபத்தின் இல்லமாக மாறும்படி கிருபை செய்யும்.
- எங்கள் தேவனே, எங்களோடு வாழும், இன்னும் உம்மை அறியாதவர்களுக்காக அதிகமாகவும் ஆழமாகவும் ஜெபிக்கக்கூடிய இருதயத்தையும் திறனையும் எங்களுக்கு அருளும்.நீர் எங்களை அனுப்பியுள்ள சமூகங்களின் கடினமான நிலங்கள் எங்கள் ஜெபங்களினால் உழுதெடுக்கப்பட்டு, உமது சுவிசேஷத்தின் விதையை ஏற்றுக்கொள்ளத் தயாராகும்படி கிரியையாற்றும்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  உங்கள் ஊர் அல்லது நகரத்தில் உள்ள கலை மற்றும் படைப்பாற்றல் துறையினரை தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.
  இசைக்கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் தங்கள் திறமைகளை தேவனுடைய மகிமைக்காகப் பயன்படுத்தும்படி மன்றாடுங்கள்.
  நியூசிலாந்தின் குற்றவியல் நீதி அமைப்பில் பணியாற்றுகிற அனைவரையும் தேவனிடம் ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள்.
  காவல்துறையினர், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், சிறைத்துறை அதிகாரிகள், பரோல் அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற அதிகாரிகள் ஆகியோரின் வாழ்விலும் பணியிலும் உண்மையும் நேர்மையும் நிலைத்திருக்கும்படி வேண்டுங்கள்.
  கீழ்க்காணும் மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்: ஜான் மற்றும் மேரி எலியட் (நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்கள்) ஜேசன் மற்றும் ஜூடி ஃபாஸெட் (தென் ஆப்பிரிக்கா) கரென் கோவர் (இங்கிலாந்து / இஸ்ரவேல்




## வியாழக்கிழமை, 3 செப்டம்பர்

# நாள் 4

அப்போஸ்தலர் 4:13
“பேதுருவும் யோவானும் கொண்டிருந்த தைரியத்தைக் கண்டு, அவர்கள் கல்வியறிவில்லாத சாதாரண மனிதர்கள் என்பதை அறிந்தபோது, அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்; மேலும், அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதை உணர்ந்தார்கள்.”

ஜெபம்

- கர்த்தராகிய இயேசுவே, இன்று நான் என் பார்வையை உம்மீது நிலைநிறுத்துகிறேன். நீர் உயர்த்தப்பட்டவரும் மகிமையுள்ளவரும், என் வீரருமான இரட்சகரும், என் எல்லா சத்துருக்களின்மேலும் ஜெயம் பெற்றவருமாக இருக்கிறீர் என்பதை நான் காண்கிறேன்.
- பரிசுத்த ஆவியானவரே, இன்று என்னை புதிதாய் நிரப்புமாறு வேண்டுகிறேன். உலகத்தில் இருப்பவனைவிட என்னுள் வாசமாயிருப்பவர் மகத்துவமுள்ளவர் என்ற உறுதியிலே என்னை மறுபடியும் ஊக்குவித்து பலப்படுத்தும். எங்கள் சபைகளின் இயக்கத்திற்காக நான் ஜெபிக்கிறேன்.
- ஒரு புதிய தைரியம் எங்கள் நடுவில் எழும்புவதாக. எங்கள் ஆராதனையும், எங்கள் ஐக்கியமும், தைரியமிக்க தேவனுடைய குமாரர்களையும் குமாரத்திகளையும் உருவாக்குவதாக. உமது குடும்பமாகிய நாங்கள், கோட்டைகளைக் குலைத்தெறியத் தேவ வல்லமையுள்ள ஆயுதங்களால் ஆயத்தப்படுத்தப்படுவோமாக.
- நாங்கள் அறிவிக்கிறோம்: எங்கள் குடும்பங்கள், எங்கள் சபைகள், எங்கள் இயக்கம் மற்றும் எங்கள் தேசத்திற்கு எதிராக எழும்பும் எல்லாவற்றின்மேலும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் ஜீவனளிக்கும் வல்லமை செயல்படுகிறது. தேவனுடைய சத்துருக்கள் எங்களைப் பற்றி எழுதியிருந்தாலும், சியிருந்தாலும், எந்தத் தீர்ப்பாக இருந்தாலும், அவற்றையெல்லாம் விட இயேசுவின் இரத்தம் மேன்மையான சாட்சியைப் பேசுகிறது என்று நாங்கள் அறிக்கையிடுகிறோம்.
- மேலும் நாங்கள் அறிவிக்கிறோம்: எங்கள் சபைகளில் உள்ள ஒவ்வொரு ஆணின் மூலமும், ஒவ்வொரு பெண்ணின் மூலமும், ஒவ்வொரு குழந்தையின் மூலமும், பரிசுத்த ஆவியின் பிரசன்னம் நாளுக்கு நாள் அதிகமாக வெளிப்படுவதாக. விசுவாசத்தோடும் கைகள்வைத்துச் ஜெபிப்பதன் மூலமும், பரிசுத்த ஆவியானவர் வல்லமையுடன் செயல்பட்டு அநேகர் வாழ்வை மாற்றுவதை நாம் காண்போமாக.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  உங்கள் நகர மேயருக்காகவும், நகர அல்லது மாவட்ட மன்ற உறுப்பினர்களுக்காகவும் ஜெபியுங்கள். அவர்களின் பெயர்கள் உங்களுக்குத் தெரிந்திருந்தால், பெயரைக் குறிப்பிட்டு தேவனிடம் மன்றாடுங்கள்.
  நியூசிலாந்து முழுவதும் பணியாற்றும் ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் குழந்தைகளைப் பராமரிக்கும் பராமரிப்பாளர்கள் அனைவருக்கும் தேவன் ஞானம், பொறுமை மற்றும் கிருபையை அருளும்படி ஜெபியுங்கள்.
  கீழ்க்காணும் மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்:
  காலின் மற்றும் ஜென்னி ஏலிங் (மொசாம்பிக் ஊழியம் - தற்போது நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்கள்) வால் பேட்டப் (தாய்லாந்து ஊழியம் - தற்போது நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்கள்) மால்கம் மற்றும் லிண்டா பேலிஸ் (தென்கிழக்கு ஆசியா ஊழியம் - தற்போது நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்கள்)

# வெள்ளிக்கிழமை, 4 செப்டம்பர்


# நாள் 5




ரோமர் 15:20-21
“கிறிஸ்துவின் நாமம் அறியப்படாத இடங்களில் சுவிசேஷத்தை
அறிவிப்பதே என் பேராவலாயிருந்தது; மற்றொருவர் போட்ட
அஸ்திபாரத்தின் மேல் நான் கட்டாமல் இருப்பதற்காக அப்படிச் செய்தேன்.
எழுதப்பட்டிருக்கிறபடி: ‘அவரைப் பற்றி அறிவிக்கப்படாதவர்கள் காண்பார்கள்;
கேள்விப்படாதவர்கள் புரிந்துகொள்வார்கள்.’“

ஜெபம்

- கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் வாழும் சமூகத்தை நீர் காண்பதுபோல காணும் கண்களை எங்களுக்கு அருளும். அவர்களின் உடைந்த நிலையையும், வேதனையையும் புதிதாய் உணர்ந்து, எங்கள் இருதயங்கள் இரக்கத்தினால் அசைக்கப்படும்படி செய்யும். எங்கள் தேசத்தின் பல சமூகங்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல், துன்புறுத்தப்பட்டும் ஆதரவற்றும் இருப்பதால், அவர்களுக்காக உம்மை நோக்கி நாம் கதறி மன்றாடுகிறோம். கர்த்தாவே, சில நேரங்களில் நாங்கள் தேவையுள்ளவர்களைப் புறக்கணித்ததற்காகவும், அவர்களிடமிருந்து விலகிச் சென்றதற்காகவும் எங்களை மன்னியும்.
- நீர் எங்களைக் கண்டுபிடித்து இரட்சித்த மகிழ்ச்சியில் மட்டும் மூழ்கி, எங்கள் அயலாரின் ஜெபத்திற்கு விடையாக எங்களை நீர் பயன்படுத்த விரும்பும் அந்த மகிழ்ச்சியான அழைப்பை மறந்துபோன தருணங்களுக்காக மன்னிப்பைக் கேட்கிறோம்.
- இயேசுவே, அன்போடும், வல்லமையோடும், பலத்தோடும் அனுப்பப்பட்டு புதிய விசுவாச சமூகங்களை (சபைகளை) நிறுவுவது என்றால் என்ன என்பதை உமது வாழ்க்கையின் மூலம் எங்களுக்குக் கற்றுக்கொடுத்ததற்காக உமக்கு நன்றி.
- நாங்கள் விசுவாசத்தோடு அறிவிக்கிறோம்: வரவிருக்கும் மாநாட்டிலும், அதற்குப் பின்வரும் ஆண்டுகளிலும், நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆ்ஃப் காட் இயக்கம், இன்னும் உம்மை அறியாத மக்கள்மீது கொண்டிருக்கும் அன்பிற்காக அறியப்படும்.
- எங்கள் இருதயங்களை மாற்றும். நாங்கள் ஒருவர்மேல் ஒருவர் கொண்டிருக்கும் அன்பு நாளுக்கு நாள் மேலும் பிரகாசித்து, உம்மை அறியாதவர்களை கிறிஸ்துவை நோக்கி ஈர்க்கும் சாட்சியாக மாறுவதாக.
- பரிசுத்த ஆவியானவரே, தாழ்மையின் ஆவி எங்கள் முழு இயக்கத்தையும் நிரப்புமாறு வேண்டுகிறோம். ஒவ்வொரு அழைப்புக்கும், ஒவ்வொரு வரத்திற்கும், ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் நீர் வைத்திருக்கும் நோக்கத்திற்கும் கதவுகளைத் திறக்க எங்களுக்கு கிருபை அருளும். அவர்கள் எழுந்து, புதிய சபைகள் உருவாகக்கூடிய இடங்களுக்கு அனுப்பப்படுவார்களாக. அவ்வாறு, ஆட்டியரோவா (நியூசிலாந்து) முழுவதும், இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பலிக்குத் தகுந்த ஆத்துமா அறுவடை கிடைக்கப்பெறுவதாக.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  நீங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலுள்ள பிற கிறிஸ்தவ சபைகள் மற்றும் பிற கிறிஸ்தவ பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து சபைகளுக்காகவும் தேவனுடைய ஆசீர்வாதத்தை அறிவித்து ஜெபியுங்கள்.
  நியூசிலாந்திலுள்ள அனைத்து கிறிஸ்தவ சபைத் தலைவர்களுக்கும், தேவன் புதிய அபிஷேகத்தையும் ஞானத்தையும் அருளும்படி மன்றாடுங்கள்.
  கீழ்க்காணும் மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்:
  ஹீதர் போர்ன் (பிரான்ஸ்) மேக்ஸ் மற்றும் டொரத்தி சிஸ்மன் (தென்கிழக்கு ஆசியா ஊழியம் - தற்போது நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்கள்)
  பெஞ்சமின் மற்றும் ஃபீபி கோஎன்றாடி (ஆப்பிரிக்கா)




## சனிக்கிழமை, 5 செப்டம்பர்

# நாள் 6

ஏசாயா 52:13-15

“இதோ, என் ஊழியக்காரன் ஞானமாய் நடப்பான்; அவர் உயர்த்தப்பட்டு, மேன்மைப்படுத்தப்பட்டு, மிகவும் மகிமைப்படுத்தப்படுவார்.
அவருடைய தோற்றம் மனிதரின் தோற்றத்தைவிட அதிகமாகக் குலைக்கப்பட்டிருந்ததாலும், அவருடைய உருவம் மனிதருடைய சாயலைவிட அதிகமாகச் சிதைக்கப்பட்டிருந்ததாலும், அநேகர் அவரைக் கண்டு திகைத்ததுபோல, அவர் அநேக ஜாதிகளைத் தூய்மைப்படுத்துவார்; ராஜாக்கள் அவரினிமித்தம் தங்கள் வாயை மூடிக்கொள்வார்கள். அவர்களுக்கு அறிவிக்கப்படாததை அவர்கள் காண்பார்கள்; அவர்கள் கேள்விப்படாததை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.”

ஜெபம்

- பரலோகப் பிதாவே, இயேசு தமது சிலுவையைச் சுமந்ததுபோல, நாங்களும் எங்கள் சிலுவையைத் தொடர்ந்து சுமக்கத் தயங்கிய தருணங்களுக்காக எங்களை மன்னியும். உம்முடைய இரக்கத்தையும், கிருபையையும், புதுப்பிக்கப்பட்ட பலத்தையும் எங்களுக்கு அருளுமாறு வேண்டுகிறோம். உமது தயவின் புதிய வெளிப்பாட்டை எங்களுக்கு அளித்து, அது உண்மையான மனந்திரும்புதலுக்கு எங்களை நடத்துவதாக. சீஷத்துவத்தின் விலையை எண்ணிப் பார்க்கும் ஞானத்தையும், ஞானமாய் நடக்கும் மனதையும், தாழ்மையின் பாதையைத் தேர்ந்தெடுக்கும் இருதயத்தையும், மீண்டும் எங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு உம்மைப் பின்பற்றும் உறுதியையும் எங்களுக்கு அருளும்.
- நாங்கள் விசுவாசத்தோடு அறிவிக்கிறோம்: நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆஃப் காட், தேவனுடைய வல்லமையில் பலப்படுத்தப்பட்ட இயக்கமாக இருந்து, எங்கள் தேசத்தின் அண்டைச் சமூகங்களையும், நகரங்களையும், ஊர்களையும் மாற்றும். நாங்கள் கிறிஸ்துவுக்குள் உள்ள விடுதலையை அறிவிக்கும் ஜனங்களாகவும், மனம் உடைந்தவர்களைக் கட்டிப்போடும் மக்களாகவும், நோயாளிகளுக்குச் சுகமளிக்கும் கர்த்தருடைய கருவிகளாகவும் இருப்போம்.
- மேலும் நாங்கள் அறிவிக்கிறோம்: அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள் ஆகிய ஐந்து மடங்கு ஊழியத்தின் அபிஷேகங்கள் எங்கள் இயக்கம் முழுவதும் எழும்பும். ஒவ்வொரு ஆணும், ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு குழந்தையும் ஊழியத்திற்காக ஆயத்தப்படுத்தப்பட்டு, அறுவடைக்குத் தயாரான முதிர்ந்த ஊழியக்காரர்களாக வளர்வார்கள்.
- எங்கள் பொதுக் கண்காணிப்பாளரான பாஸ்டர் டெரி பிராட்லி அவர்களுக்காகவும், எங்கள் நிர்வாகக் குழுவிற்காகவும் ஜெபிக்கிறோம். அவர்களுக்கு ஞானமுள்ள திட்டங்களையும், புதிய பலத்தையும், தைரியத்தையும் அருளும். நீர் வழிநடத்துகிறபடியே அவர்கள் எங்கள் இயக்கத்தை விசுவாசத்தோடும் தெளிவோடும் வழிநடத்த கிருபை செய்யும்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  உங்கள் ஊர் அல்லது நகரத்தில் பணியாற்றும் பராமரிப்பாளர்கள் (Carers) மற்றும் சமூகப் பணியாளர்கள் (Social Workers) ஆகியோருக்காக ஜெபியுங்கள்.
  நியூசிலாந்தில் புதிய கண்டுபிடிப்பாளர்களும் (Innovators), தொழில் முனைவோரும் (Entrepreneurs) எழும்பி, சமுதாயத்திற்கு நன்மை செய்யும் முயற்சிகளில் தேவன் அவர்களை ஆசீர்வதிக்கும்படி மன்றாடுங்கள்.
  கீழ்க்காணும் மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்: சாம் மற்றும் கரோல் சௌகோட்டா (இந்தோனேசியா) ராட் மற்றும் லின்லி டால்பட் (ஆப்பிரிக்கா)

ஞாயிற்றுக்கிழமை, 6 செப்டம்பர்


# நாள் 7



1 கொரிந்தியர் 15:57-58
“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயத்தைக் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், என் பிரியமான சகோதரர்களே சகோதரிகளே, நீங்கள் உறுதியாயிருந்து, அசையாதவர்களாயிருங்கள். கர்த்தருடைய வேலையில் எப்பொழுதும் மிகுதியாக ஈடுபட்டிருங்கள்; கர்த்தருக்குள் நீங்கள் செய்யும் உழைப்பு வீணாகாது என்பதை அறிந்திருக்கிறீர்கள்.”

ஜெபம்

- பரலோகப் பிதாவே, ஒருபோதும் தமது கிரியையை நிறுத்தாத தேவனாகவும், எப்போதும் தமது மீட்பின் பணியில் ஈடுபட்டிருக்கும் தேவனாகவும் இருக்கும் உம்மை நான் கனப்படுத்துகிறேன். வழிதவறிப்போன மக்களைத் தேடி இரட்சிப்பதே உமது இருதயத்தின் ஆவலும், உமது முக்கிய நோக்கமும் என்பதை நினைத்து மகிழ்கிறேன். பிதாவே, நான் உமது பிள்ளை என்பதிலும், இந்த மீட்பின் பணிக்கான உமது இருதயத்தைப் பகிர்ந்துகொள்ளும் பாக்கியத்தைப் பெற்றிருப்பதிலும் ஆனந்தப்படுகிறேன். இன்று, நீர் எனக்கு ஒப்படைத்திருக்கும் உமது ராஜ்யப் பணிக்காக என்னை மீண்டும் புதிதாய் அர்ப்பணிக்கிறேன்.
- கர்த்தாவே, சில நேரங்களில் பயத்தினாலும், சுயநலத்தினாலும், வெட்கத்தினாலும், உம்மை அறிந்த மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிரத் தவறியதற்காக எங்களை மன்னியும். உம்மோடு கொண்டிருக்கும் உறவின் ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்குக் கடத்தாமல் இருந்ததற்காகவும் எங்களை மன்னியும்.
- நாங்கள் விசுவாசத்தோடு அறிவிக்கிறோம்: இனிவரும் காலங்களில் நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் இயக்கம், அறுவடைக்குத் தயாராகிய வயல்களுக்குள் தேவனால் அனுப்பப்படும் வல்லமையுள்ள சேனையாக தன்னைத்தானே காணும். எங்கள் அடையாளம்: “தேவனுடைய வேலையாட்கள்; ஜாதிகளை அவரிடத்தில் சேர்ப்பதற்காக, அவராலே ஒன்றாகக் கட்டப்பட்ட ஜனங்களின் இல்லம்.”
- என்று இருக்கும். எங்கள் இயக்கம் முழுவதும் அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர் மற்றும் போதகர் ஆகிய ஐந்து மடங்கு ஊழிய வரங்களை நீர் எழுப்பி அனுப்புகிறதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களுக்குள் தாழ்மையிலிருந்து வரும் உண்மையான பலத்தை நீர் வளர்த்துக் கொண்டிருக்கிறீர் என்பதற்காக உமக்கு நன்றி. நாங்கள் ஒருவர்மேல் ஒருவர் கொண்டிருக்கும் அன்பு மேலும் ஆழமடையவும், மற்றவர்களை முன்னிலைப்படுத்தவும், அவர்கள் பெற்றிருக்கும் வரங்கள் வெளிப்பட இடமளிக்கவும் எங்களை வழிநடத்தும்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  உங்கள் ஊர் அல்லது நகரத்தில் அடிமைத்தனப் பழக்கங்களால் (Addiction) பாதிக்கப்பட்டவர்களும், மனச்சோர்வுடன் (Depression) போராடுகிறவர்களும் நம்பிக்கையைப் பெறும்படி ஜெபியுங்கள்.
  ஆட்டியரோவா (நியூசிலாந்து) முழுவதும், பிள்ளைகளின் இருதயங்கள் தங்கள் தந்தையரிடமும், தந்தையரின் இருதயங்கள் தங்கள் பிள்ளைகளிடமும் திரும்பும்படி தேவனை வேண்டுங்கள்.
  கீழ்க்காணும் மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்: ஹிலரி மற்றும் ஜாக்கி துமுசீமே (உகாண்டா) ராபின் மற்றும் மார்கரெட் ஜம் (கென்யா) பீட்டர் மற்றும் ஹெலன் பிரவுன் (பிலிப்பைன்ஸ்)




## திங்கட்கிழமை, 7 செப்டம்பர்

# நாள் 8

லூக்கா 22:40-46

அந்த இடத்திற்கு வந்தபோது, இயேசு அவர்களை நோக்கி: “நீங்கள் சோதனைக்குள் விழாதபடிக்கு ஜெபியுங்கள்” என்றார். பின்பு அவர் அவர்களை விட்டு, ஒரு கல் எறியும் தூரம் சென்று, முழங்கால்படியிட்டு ஜெபித்து: “பிதாவே, உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். ஆயினும், என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்றார். அப்பொழுது பரலோகத்திலிருந்து ஒரு தூதன் அவருக்குத் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகுந்த வேதனையோடு ஊக்கமாய் ஜெபித்தார்; அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளைப் போலத் தரையில் விழுந்தது. ஜெபத்தை முடித்து எழுந்து சீஷர்களிடத்தில் வந்தபோது, அவர்கள் துக்கத்தினால் சோர்ந்து தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர் அவர்களை நோக்கி: “நீங்கள் ஏன் தூங்குகிறீர்கள்? சோதனைக்குள் விழாதபடிக்கு எழுந்து ஜெபியுங்கள்” என்றார்.

ஜெபம்

- பரிசுத்த ஆவியானவரே, நீர் எனக்கு ஒப்படைத்த பொறுப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான வல்லமையை அருளுகிறவராக இருப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். பரலோகப் பிதாவே, என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே என் வாழ்வில் நிறைவேற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்னையும், என் சகோதர சகோதரிகளையும் பலப்படுத்துவதற்காக நீர் உமது தூதர்களை அனுப்புகிறீர் என்பதை நினைத்து மகிழ்கிறேன்.
- நான் சோதனைக்குள் விழாதபடிக்கும், உமது சபையை நீர் பலப்படுத்தும்படிக்கும் ஜெபிக்கிறேன். கர்த்தாவே, எங்கள் பலவீனத்தின் நேரங்களில் ஜெபிக்கத் தவறி, ஜெபத்தின் வல்லமையை மறந்துபோன தருணங்களுக்காக எங்களை மன்னியும். ஜெபத்திற்கான புதிய கிருபையையும், இடைவிடாமல் நிலைத்திருந்து ஜெபிக்கிற புதிய வாஞ்சையையும் எங்களுக்குள் எழுப்பும்.
- நாங்கள் விசுவாசத்தோடு அறிவிக்கிறோம்: எங்கள் இயக்கத்தில் ஜெபத்தின் ஆவியும், தேவனுக்கு முன்பாக தாழ்மையின் ஆவியும் பரலோகத்தின் கதவுகளைத் திறக்கும். எங்கள் ஒவ்வொரு சபையிலும், உமது ஜனங்கள் அறுவடைக்காக ஜெபிக்கவும் உபவாசிக்கவும் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுவார்கள். நீர் எங்களை வைத்திருக்கும் பணியிடங்களிலும், அண்டைச் சமூகங்களிலும், சபைகளிலும், ஊழியத்திற்கும் சேவைக்கும் தேவையான புதிய வரங்களாலும் வல்லமையாலும் எங்களை பலப்படுத்துவீராக.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  நியூசிலாந்தின் தெற்கு தீவின் கீழ்ப்பகுதி முழுவதின்மேலும் தேவனுடைய ஆசீர்வாதத்தையும், பரிசுத்த ஆவியின் வல்லமையான ஊற்றுதலையும் அறிவியுங்கள்.
  அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற பாஸ்டர் பீட்டர் நெக்லென் மற்றும் மற்ற எல்லா போதகர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி ஜெபியுங்கள்.
  எங்கள் பொதுக் கண்காணிப்பாளரான பாஸ்டர் டெரி பிராட்லி மற்றும் அவரது மனைவி ரோவேனா பிராட்லி ஆகியோருக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா தேவைகளுக்குமான வழங்குதல் மற்றும் ஞானத்தை அருளும்படி மன்றாடுங்கள்.
  கீழ்க்காணும் மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்: கே ஃபவுண்டன் (ஆசியா-பசிபிக் ஊழியம் - தற்போது நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்) ஆலன் மற்றும் எலிசபெத் ஓ’லாக்லின் (இங்கிலாந்து) டக் மற்றும் கலிண்டா லிக்ட்வார்க் (கிழக்கு ஆசியா) M மற்றும் K T (தென்கிழக்கு ஆசியா)

# செவ்வாய்க்கிழமை, 8 செப்டம்பர்

# நாள் 9



எபேசியர் 3:14-16
“இதினிமித்தம் நான் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகியவருக்கு முன்பாக என் முழங்கால்களை முடக்குகிறேன். பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள முழுக் குடும்பமும் அவராலே பெயர் பெற்றிருக்கிறது. அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படி, தமது ஆவியினாலே உங்களுடைய உள்ளான மனிதனில் வல்லமையினால் பலப்படுத்தும்படி உங்களுக்குக் கிருபை செய்வாராக.

ஜெபம்

- பரலோகப் பிதாவே, அநேக தசாப்தங்களாக எங்கள் சபை இயக்கத்தின்மேல் நீர் காட்டிய உண்மைத்தன்மையையும், உமது வாக்குத்தத்தங்களின் மாட்சிமையையும் நினைத்து நாங்கள் வியப்பில் நிற்கிறோம். எங்களுடைய குறைகளையும் பலவீனங்களையும் மீறி, எங்களை உமக்கென்று ஒரு ஜனமாகப் பாதுகாத்து வந்ததற்காக உமக்கு மனமார்ந்த நன்றி செலுத்துகிறோம். 2033 ஆம் ஆண்டிற்கு முன்பாக உலகளாவிய Assemblies of God இயக்கம் இருமடங்கு வளர வேண்டும் என்ற தரிசனத்தையும், வெளிப்பாட்டையும், கிருபையையும், வல்லமையையும் அருளியதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.
- பரிசுத்த ஆவியானவரே, மிகுந்த பயபக்தியோடு நாங்கள் அறிக்கையிடுகிறோம்: “இது மனித வல்லமையினாலோ, மனித சக்தியினாலோ அல்ல; உமது ஆவியினாலே மட்டுமே நிறைவேறும்.” பிதாவே, உமது மகிமையின் ஐசுவரியத்தின்படி, எங்கள் உள்ளான மனிதனை வல்லமையால் பலப்படுத்தும் ஆவிக்குரிய பலத்தை எங்களுக்கு அருளும். எங்களை எப்போதும் தாழ்மையுடனும், உமது வழிகளுக்குக் கீழ்ப்படிந்தவர்களாகவும் காத்தருளும். ஏனெனில், எங்கள் சொந்த பலத்தின் மேல் நம்பிக்கை வைப்பது எங்களுக்கு மிகவும் எளிதானது.\
- பிதாவே, என் வாழ்க்கையில் இன்னும் இயேசு கிறிஸ்து ஆண்டவராக இல்லாத எந்தப் பகுதியும் இருந்தால் அதை எனக்குக் காண்பியும். என்னுள் ஏதேனும் பொல்லாத வழி இருந்தால் அதை வெளிப்படுத்தும்.
  எங்கள் சபைகளின் நடுவே வந்து, பரிசுத்தமற்றதையும், நீர் எங்களை அழைத்திருக்கும் ஊழியத்திற்கு ஏற்றதல்லாத அனைத்தையும் தைரியத்தோடு அகற்றும் மனதை எங்களுக்கு அருளும். நாங்கள் உறுதியாக அறிவிக்கிறோம்: வரவிருக்கும் மாநாட்டிலும், அதற்குப் பின்வரும் காலங்களிலும், நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் இயக்கம் தேவனுடைய வல்லமையில் பலமுள்ள இயக்கமாகத் திகழும்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  நியூசிலாந்தின் தென் தீவின் மத்தியப் பகுதிகளின்மேல் தேவனுடைய ஆசீர்வாதத்தையும், பரிசுத்த ஆவியின் வல்லமையான ஊற்றுதலையும் அறிவியுங்கள்.
  அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற பாஸ்டர் ஜொனாதன் ஹேல்ஸ் மற்றும் மற்ற எல்லா போதகர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி ஜெபியுங்கள்.
  எங்கள் துணைப் பொதுக் கண்காணிப்பாளரும், சமோவா இனக் குழுவின் தலைவருமான பாஸ்டர் லாவ் ஃபலேதுதுலு மற்றும் அவரது மனைவி நான்சி ஃபலேதுதுலு ஆகியோருக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா வழங்குதல்களும், ஞானமும் அருளும்படி மன்றாடுங்கள்.
  எங்கள் சமோவா சபைகள் அனைத்தின்மேலும் இரட்டிப்பு ஆசீர்வாதத்தை அறிவித்து, புதிய சமோவா சபை நிறுவுநர்களை (Church Planters) தேவன் எழுப்பி அனுப்பும்படி ஜெபியுங்கள்.
  கீழ்க்காணும் மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்: ஜான் மற்றும் லிண்டா வாட்சன் (நியூசிலாந்தைத் தளமாகக் கொண்டவர்கள்) டேவிட் மற்றும் புஷ்பா வாட்டர்ஸ் (தென்கிழக்கு ஆசியா) கென் மற்றும் எர்லா விர்ட்யூ (பிலிப்பைன்ஸ்

# நாள் 10

STRENGTHEN

**2 தெசலோனிக்கேயர் 3:1–5**
"சகோதரரே, கர்த்தருடைய வார்த்தை உங்களிடத்தில்
நடந்ததுபோல வேகமாகப் பரவி மகிமைப்படும்படிக்கும்,
நாங்கள் பொல்லாதவர்களும் தீயவர்களுமான மனிதர்களிடமிருந்து
விடுவிக்கப்படும்படிக்கும் எங்களுக்காக ஜெபியுங்கள்; ஏனெனில் எல்லாருக்கும் விசுவாசம்
இல்லை. கர்த்தரோ உண்மையுள்ளவர்; அவர் உங்களைப் பலப்படுத்தி, தீயவனிடமிருந்து
காத்துக்கொள்வார். நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டவற்றை நீங்கள் செய்கிறீர்கள்,
இனிமேலும் செய்வீர்கள் என்று கர்த்தருக்குள் உங்களைப்பற்றி நம்பிக்கையாயிருக்கிறோம்.
கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனுடைய அன்பிற்குள்ளும் கிறிஸ்துவின்
பொறுமைக்குள்ளும் நடத்துவாராக."

ஜெபம்


- கர்த்தராகிய இயேசுவே, பரிசுத்த ஆவியின் வல்லமையையும் பெந்தெகொஸ்தே சாட்சியத்தையும் ஆட்டியரோவா (நியூசிலாந்து) முழுவதும் நிலைநாட்டுவதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த எங்கள் ஆவிக்குரிய தந்தையரும் தாயார்களும் கொண்டிருந்த தீவிரமான அன்பிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
- பரலோகப் பிதாவே, இந்த தேசத்தின் கரைகளில் முதன்முதலாக பெந்தெகொஸ்தே நெருப்பை ஏற்றினதுபோல, மீண்டும் எங்கள் சபைகளில் முதலாம் அன்பை (First Love) எழுப்பும். மனிதர்கள் என்ன நினைப்பார்கள் என்ற பயம் எங்களை எங்கு கட்டிப்போட்டிருக்கிறது என்பதை எங்களுக்குக் காட்டி, அந்தப் பயத்திலிருந்து எங்களை விடுவிக்கும்.
- கர்த்தராகிய இயேசுவே, எங்கள் தேசத்தின் ஒவ்வொரு மொழியிலும், ஒவ்வொரு இனத்திலும், ஒவ்வொரு தலைமுறையிலும் உள்ள ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள், சிறுமிகள் ஆகியோரின் வாழ்க்கையில் பெந்தெகொஸ்தே நெருப்பு இன்னும் எரிந்து கொண்டிருப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
- எதிர்கால ஆண்டுகளில் நடைபெறவிருக்கும் எங்கள் மாநாட்டின்மேலும், எங்கள் இயக்கத்தின்மேலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் பிதாவுமானவரின் பல்வேறு கலாச்சாரங்களை இணைக்கும், தலைமுறைகளை ஒன்றிணைக்கும், ஒருவரை ஒருவர் சார்ந்து செயல்படும் ஆசீர்வாதம் இறங்குவதாக அறிக்கையிடுகிறோம்.
- ஆட்டியரோவா (நியூசிலாந்து) முழுவதும் இயேசு கிறிஸ்துவில் புதிய விசுவாசமும் புதிய நம்பிக்கையும் நிறைந்த ஒரு புதிய யுகம் உதயமாகிறது என்று அறிவிக்கிறோம்.நியூசிலாந்து மக்களின் உதடுகளில் ஒரு புதிய பாடல் எழும்பும். அது தேவனுடைய நன்மையையும், இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்த இரட்சிப்பின் கிரியையையும் மகிழ்ச்சியோடு பாடும் பாடலாக இருக்கும்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஜெபக் குறிப்புகள்
  தென் தீவின் வடக்கு பகுதி **(Upper South Island)** முழுவதும் தேவனுடைய ஆசீர்வாதமும் பரிசுத்த ஆவியின் வல்லமையான பொழிவும் உண்டாகும்படி ஜெபியுங்கள். பாஸ்டர் ராஸ் பெர்குசன் **(Ps Ross Ferguson)** மற்றும் அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற அனைத்து மேய்ப்பர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி வேண்டுங்கள்.
  எங்கள் நிர்வாகக் குழு உறுப்பினரும் **Te Roopu Māori** தலைவருமான பாஸ்டர் மினா **(Ps Mina)** மற்றும் டென்னிஸ் ஆக்ரமன் **(Dennis Acraman)** ஆகியோருக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா ஆதாரங்களும், தெய்வீக ஞானமும் வழங்கும்படி ஜெபியுங்கள். நியூசிலாந்திலுள்ள அனைத்து மாவோரி **(Māori)** சபைகளின் மேல் இரட்டிப்பு ஆசீர்வாதம் இறங்கும்படியும், புதிய மாவோரி சபை ஸ்தாபகர்களை **(Church Planters)** தேவன் எழுப்பி அனுப்பும்படியும் ஜெபியுங்கள்.
  பின்வரும் உலக மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்: சாலமோன் மற்றும் சோலா சாண்ட் **(Solomon & Sola Chand)** – நவுரு (Nauru) **J** மற்றும் **C M** – இந்தோனேசியா (Indonesia)
  ஹமிஷ் மற்றும் ஹெய்டி பெட்ஸ் **(Hamish & Haidee Betts)** – சிங்கப்பூர் (Singapore)

# நாள் 11




அப்போஸ்தலர் 1:8
"பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள்;
அப்பொழுது நீங்கள் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும்,
சமாரியாவிலும், பூமியின் கடைசிப் பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."
ஜெபம்

- பரலோகப் பிதாவே, பரிசுத்த ஆவியை எங்களுக்கு அனுப்பியதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். அற்புத ஆலோசகராகிய பரிசுத்த ஆவியே, எங்கள் ஊழியத்தின் வழிநடத்துபவரும் திட்டமிடுபவரும் நீரே. எங்களுக்குள் உமது மகத்தான வல்லமையினால் செயல்பட்டு, பிசாசின் கிரியைகளை மேற்கொள்ளாமல் முறியடிக்க எங்களைப் பலப்படுத்துகிறீர் என்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.
- நியூசிலாந்து முழுவதும் பரிசுத்த ஆவியின் தடுக்க முடியாத, இடைவிடாத பொழிவு உண்டாகும் என்று அறிக்கையிடுகிறோம். உமது சபையை புதிய திராட்சரசத்தை ஏற்றுக்கொள்ளத் தயாரான புதிய தோல்பைகளாக (New Wineskin) மாற்றுவீர் என்று விசுவாசிக்கிறோம். வல்லமையுடனும் ஆயத்தத்துடனும் நிறைந்த சபையாக எங்களை உருவாக்கும்.
- எங்கள் தேசம் முழுவதும் புதிய சபைகளும், புதிய விசுவாச சமூகங்களும் நிறுவப்படுவதாக அறிக்கையிடுகிறோம். வரவிருக்கும் ஆண்டுகளில் சீஷர்களை உருவாக்குவதற்கான புதிய கிருபையை எங்களுக்குத் தாரும். அந்த சீஷர்கள் அறுவடைக்குள் அனுப்பப்படும் வேலையாட்களாகவும், உலக நாடுகளை சீஷர்களாக்கும் ஊழியக்காரர்களாகவும் எழும்பட்டும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையினால் எல்லா கட்டுப்பாடுகளும், சாபங்களும், அடிமைத்தனங்களும், வியாதிகளும், நோய்களும் முறியடிக்கப்படுவதாக அறிக்கையிடுகிறோம்.
- எங்கள் Whenua (தேசம் / நிலம்) முழுவதின்மேலும் இயேசுவின் இரத்தத்தை விண்ணப்பிக்கிறோம். இயேசுவின் நாமத்தில் தேவனுடைய சத்துருக்களைக் கட்டுகிறோம்; சாத்தானின் கோட்டைகளையும் அரண்களையும் இடித்துப் போடுகிறோம்; தீய ஆவிகளே, இயேசுவின் நாமத்தில் விலகிச் செல்லும்படி கட்டளையிடுகிறோம்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஜெபக் குறிப்புகள்
  வெலிங்டன் (Wellington) பிராந்தியம் முழுவதும் தேவனுடைய ஆசீர்வாதமும் பரிசுத்த ஆவியின் வல்லமையான பொழிவும் உண்டாகும்படி ஜெபியுங்கள். பாஸ்டர் மால்கம் பேலிஸ் (Ps Malcolm Bayliss) மற்றும் அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற அனைத்து மேய்ப்பர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி வேண்டுங்கள்.
  எங்கள் அன்பிற்குரிய Alphacrucis College-ஐ தேவனிடம் ஒப்படைத்து, அதன் மேல் தேவனுடைய ஆசீர்வாதமும் தேவையான எல்லா ஆதாரங்களும் பெருகும்படி ஜெபியுங்கள். எல்லா தலைமுறைகளிலிருந்தும் மாணவர்களை Alphacrucis College-இல் சேர்ந்து தேவனுடைய வார்த்தையையும் பரிசுத்த ஆவியின் வல்லமையையும் கற்றுக்கொள்ள தேவன் அழைக்கும்படி வேண்டுங்கள். தேசிய இயக்குநர் பாஸ்டர் லியானா குகுடாய் (Ps Leeana Kukutai) மற்றும் Alphacrucis கல்லூரியின் அனைத்து பணியாளர்களுக்கும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் பலம், ஆழமான ஞானம் மற்றும் தேவனுடைய அன்பைப் பற்றிய வளர்ந்த அறிவை தேவன் அருளும்படி ஜெபியுங்கள்.
  பின்வரும் உலக மிஷனரிகளுக்காக ஜெபியுங்கள்: பிலிப் மற்றும் சாரா ஹாக்கன் (Philip & Sarah Hawken) - கென்யா (Kenya) டேவ் மற்றும் ஹெய்டி ஃப்ரேசர் (Dave & Heidi Fraser) - கம்போடியா (Cambodia)




# வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 11 வேதாகம வாசகம்

# நாள் 12

**2 கொரிந்தியர் 5:20**
"ஆகையால் நாங்கள் கிறிஸ்துவுக்காகத் தூதர்களாயிருக்கிறோம்; தேவன் எங்கள் மூலமாக வேண்டிக்கொள்கிறார். கிறிஸ்துவுக்குப் பதிலாக நாங்கள் உங்களை வேண்டிக்கொள்கிறோம்: 'தேவனோடு ஒப்புரவாகுங்கள்.'"
ஜெபம்

- பரலோகப் பிதாவே, உமக்கு முன்பாகத் தாழ்மையுடன் பணிகிறோம். எங்கள் குடும்பங்களில், எங்கள் நகரங்களிலும் பட்டணங்களிலும், எங்கள் சபைகளிலும், எங்கள் தேசத்திலும் நீர் ஏற்கனவே செய்திருக்கும் அற்புதமான கிரியைகளுக்காகவும், இனி செய்யப்போகிறீர் என்று வாக்களித்திருக்கும் எல்லாவற்றிற்காகவும் உமக்கு கனமும், துதியும், மகிமையும் செலுத்துகிறோம். எங்களை ஒன்றோடொன்று பின்னிப்பிணைத்து, எங்கள் இயக்கத்தின் மத்தியில் புதிய காரியங்களைச் செய்து, நாளுக்கு நாள் எங்களைப் பலப்படுத்தி வருவதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
- பிதாவே, எங்கள் மத்தியில் தொடர்ந்து உமது சித்தத்தை நிறைவேற்றும். நீர் ஆரம்பித்த நல்ல கிரியையைப் பூரணமாக முடித்தருளும். எங்கள்மேல் கிருபையாயிருந்து, எங்கள் மாநாட்டிலும் வரவிருக்கும் ஆண்டுகளிலும் உமது முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கச் செய்யும். உமது நாமத்தின் மகிமைக்காக எங்கள் சபைகளில் ஆழமானதும் நிலைத்திருப்பதுமான ஆவிக்குரிய கிரியையைச் செய்யும். எங்கள் தேவனே, ஆட்டியரோவா (நியூசிலாந்து) தேச மக்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.
- சுவிசேஷத்தை முதலில் கேட்டு ஏற்றுக்கொண்டு, தங்கள் எதிரி இனங்களுக்குக்கூட உடனடியாகப் பிரசங்கிகளையும் புதிய சபை ஸ்தாபகர்களையும் அனுப்பிய Tangata Whenua (மாவோரி பூர்வகுடி மக்கள்) அவர்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஒருகாலத்தில் Iwi (மாவோரி இனக்குழுக்கள்) மற்றும் Hapū (உட்பிரிவுகள்) முழுவதும் பரவிய எழுப்புதலின் (Revival) அக்கினிக்காக உமக்கு ஸ்தோத்திரம். பரிசுத்த ஆவியே, அந்த அக்கினியின் எரிந்துகொண்டிருக்கும் சாம்பலின் மேல் மீண்டும் உமது காற்றை ஊதும்படி வேண்டுகிறோம். இந்த தேசத்தின் (Motu) ஒவ்வொரு மாவோரி இனத்தாரையும் இயேசு கிறிஸ்துவிடம் வரும்படி அழைக்கிறோம்; அவருடைய நாமத்தில் உண்மையான ஜீவனைப் பெறும்படி ஜெபிக்கிறோம்.
- கர்த்தராகிய இயேசுவே, சீஷர்களை உருவாக்குவதற்கும் புதிய சபைகளை நிறுவுவதற்கும் புதிய தரிசனங்களையும் புதிய உத்திகளையும் அளிப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் எல்லாச் சபைகளிலும் உடைந்த மனதுடையவர்கள், காயப்பட்டவர்கள், அடிமைத்தனங்களில் சிக்கியவர்கள், வீடற்றவர்கள் ஆகியோரின் அழுகுரலை மென்மையான இருதயத்தோடும் உண்மையான இரக்கத்தோடும் காணவும் கேட்கவும் எங்களை ஆயத்தப்படுத்தும். எங்கள் ஜெபம் இதுவே: "ஆண்டவரே, என்னைப் பலப்படுத்தும். அன்போடு என்னை அனுப்பும். உமது கிருபையோடு என்னை அனுப்பும். விசுவாசத்தின் சாகசப் பயணங்களுக்கு என்னை அனுப்பும். சிறைப்பட்டவர்களை விடுதலை செய்யும் உமது வல்லமையோடு என்னை அனுப்பும்."
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஜெபக் குறிப்புகள்
  வடத் தீவின் மேற்கு கடற்கரை (West Coast North Island) முழுவதும் தேவனுடைய ஆசீர்வாதமும் பரிசுத்த ஆவியின் வல்லமையான பொழிவும் உண்டாகும்படி ஜெபியுங்கள்.
  பாஸ்டர் பால் கார்னிஷ் (Ps Paul Cornish) மற்றும் அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற அனைத்து மேய்ப்பர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி வேண்டுங்கள்.
  எங்கள் இயக்கத்தில் பெண்களின் ஊழியத்தை முன்னெடுத்து வரும் பாஸ்டர் பிப் பேட்டன் (Ps Pip Batten)அவர்களுக்காக ஜெபியுங்கள். குடும்பங்களிலும், அயல்பகுதிகளிலும், சபைகளிலும், பணியிடங்களிலும் வல்லமையுடன் தேவனுக்குச் சேவை செய்யும் ஆவிக்குரிய பெண்களை தேவன் எழுப்பும்படி வேண்டுங்கள்.
  எங்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்களான பாஸ்டர் சஞ்சய் (Ps Sanjai) மற்றும் சுனிதா கண்ட்ரேகுலா (Sunitha Kandregula) ஆகியோருக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா ஆதாரங்களும், தெய்வீக ஞானமும் வழங்கும்படி ஜெபியுங்கள்.

# சனிக்கிழமை, செப்டம்பர் 12 வேதாகம வாசகம்


# நாள் 13




உபாகமம் 31:7-8
"அப்பொழுது மோசே யோசுவாவை அழைத்து, இஸ்ரவேலர் அனைவருக்கும் முன்பாக அவனை நோக்கி: 'பலமாயிரு, தைரியமாயிரு. கர்த்தர் அவர்களுடைய பிதாக்களுக்கு கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்திற்குள் இந்த ஜனங்களோடே நீ போக வேண்டும்; அதை அவர்களுக்கு சுதந்தரமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். கர்த்தரே உனக்கு முன்னே போகிறார்; அவர் உன்னோடிருப்பார்; உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. ஆகையால் பயப்படாதே, கலங்காதே 'என்றார்."

ஜெபம்

- அறுவடையின் ஆண்டவரே, நீர் எங்களை அழைக்கும் சத்தத்தைக் கேட்கிறோம். நியூசிலாந்திலுள்ள Assemblies of God ஆகிய நாங்கள், சீஷத்துவத்தின் விலையை எண்ணிப் பார்த்திருக்கிறோம். இன்று நாங்கள் ஒருமனதாக, "ஆம் ஆண்டவரே, அந்த விலையைச் செலுத்த நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்" என்று கூறுகிறோம். நாங்கள் அப்போஸ்தலர்களாக செல்வோம். நாங்கள் தீர்க்கதரிசிகளாக செல்வோம். நாங்கள் சுவிசேஷகர்களாக செல்வோம். நாங்கள் மேய்ப்பர்களாக (பாஸ்டர்களாக) செல்வோம்.
- நாங்கள் போதகர்களாக செல்வோம். கர்த்தராகிய இயேசுவே, பிதாவினால் நீர் அனுப்பப்பட்டதுபோல, நாங்களும் ஒருவரை ஒருவர் உமது ஊழியத்திற்காக அனுப்புகிறோம். எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும், மற்றவர்களைப் பலப்படுத்தவும் ஆசீர்வதிக்கவும் நீர் வைத்திருக்கும் உமது கிருபையின் பங்கிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். அதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்கிறோம்.
- கர்த்தராகிய இயேசுவே, ஒருவரை ஒருவர் கவனிக்காமல் இருந்ததற்காகவும், ருவரின் மதிப்பை ஒருவர் குறைவாக எண்ணியதற்காகவும், நீர் கொடுத்த வரங்களை தவறாகப் பயன்படுத்தியதற்காகவும் எங்களை மன்னியும். ஒருவரை ஒருவர் உண்மையாகக் காண புதிய கண்களையும், ஒருவரை ஒருவர் கவனமாகக் கேட்க புதிய செவிகளையும் எங்களுக்குத் தாரும். நாங்கள் எங்கள் இடதுபுறமும் வலதுபுறமும் பார்க்கிறோம்.
- அங்கே நீர் அழைத்திருக்கும் அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், விசேஷகர்களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் காண்கிறோம். அவர்களை அறிந்துகொள்கிறோம். அவர்களை விடுவிக்கிறோம். அவர்களை அவர்களுடைய அழைப்பிற்குள் வரும்படி அழைக்கிறோம்.
- நியூசிலாந்திலுள்ள Assemblies of God இயக்கத்திற்கு ஒரு புதிய யுகம் ஆரம்பமாகிறது என்று அறிக்கையிடுகிறோம். இந்த ஐந்து ஊழிய வரங்களும் (Five-fold Ministry) ஒன்றிணைந்து செயல்பட்டு, அறுவடைக்குள் அனுப்பப்படுவதை நாங்கள் காண்கிறோம். நிலைத்திருக்கும் எழுப்புதலையும் (Revival), வரவிருக்கும் பல தசாப்தங்களாக சீஷர்களை உருவாக்கும் ஊழியத்தின் தொடர்ச்சியையும் விசுவாசக் கண்களால் முன்னரே காண்கிறோம்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஜெபக் குறிப்புகள்
  வடத் தீவின் கிழக்குக் கடற்கரை (East Coast North Island) முழுவதும் தேவனுடைய ஆசீர்வாதமும் பரிசுத்த ஆவியின் வல்லமையான பொழிவும் உண்டாகும்படி ஜெபியுங்கள்.
  பாஸ்டர் சஜன் ஈசோ (Ps Sajan Easow) மற்றும் அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற அனைத்து மேய்ப்பர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி வேண்டுங்கள்.
  எங்கள் இயக்கம் குழந்தைகள் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியுடனும் வளரக்கூடிய ஒரு ஆன்மீக இல்லமாக மாறும்படி ஜெபியுங்கள்.
  எங்கள் சபைகள் மூலம் குழந்தைகள் கிறிஸ்துவின் சீஷர்களாக வளர்க்கப்படுவதாக அறிக்கையிடுங்கள்.
  குழந்தைகள் ஊழியத்தை வழிநடத்துவதோடு, தேசிய அலுவலகத்தின் நிதி மற்றும் கட்டண நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுள்ள பாஸ்டர் சாரா கூப் (Ps Sarah Coupe) அவர்களை தேவன் பலப்படுத்தி, ஞானத்துடனும் கிருபையுடனும் வழிநடத்தும்படி ஜெபியுங்கள்.




## ஞாயிற்றுக்கிழமை, 13 செப்டம்பர்

# நாள் 14

1 பேதுரு 2:9-10
“ஆனால், நீங்கள் தேர்ந்துகொள்ளப்பட்ட சந்ததியும், அரச ஆசாரியக்கூட்டமும், பரிசுத்த ஜாதியும், தேவனுக்குச் சொந்தமான ஜனமுமாயிருக்கிறீர்கள். அவர் உங்களை இருளிலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளிக்குள் வரவழைத்தவருடைய மகிமையான செயல்களை அறிவிக்கும்படியாகவே உங்களைத் தேர்ந்துகொண்டார். முன்பு நீங்கள் ஜனமல்லாதிருந்தீர்கள்; இப்பொழுதோ தேவனுடைய ஜனமாயிருக்கிறீர்கள். முன்பு இரக்கம் பெறாதிருந்தீர்கள்; இப்பொழுதோ இரக்கம் பெற்றிருக்கிறீர்கள்.”

ஜெபமும் அறிக்கையும்

- பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படியுங்கள்.
  1 பேதுரு 2-ல் உள்ள இந்த வசனங்களை, பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்துகிறபடி, தனிநபர்கள், குடும்பங்கள், ஊர்கள், நகரங்கள், சபைகள் மற்றும் தேசங்களின் மேல் விசுவாச அறிக்கையாக அறிவியுங்கள்.
  தேவையான இடங்களில் [ ] உள்ள பகுதிகளில், பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் வைக்கும் நபர்களின் பெயர்கள், உங்கள் ஊர் அல்லது நகரம், உங்கள் சபை, அல்லது குறிப்பிட்ட தேசங்களின் பெயர்களை சேர்த்து ஜெபியுங்கள்.
  அறிக்கை [______________] தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட ஜனங்கள். [______________] அரச ஆசாரியர்கள். [______________] பரிசுத்த ஜாதி. [______________] தேவனுக்கே சொந்தமான மக்கள். ஆகையால், [______________] இருளிலிருந்து தம்முடைய அதிசயமான ஒளிக்குள் அழைத்த தேவனுடைய நன்மைகளையும் மகிமையையும் மற்றவர்களுக்கு அறிவிப்பார்கள். தேவன் [______________] அவர்களை இருளிலிருந்து வெளியே அழைத்து, தமது அற்புதமான ஒளிக்குள் கொண்டுவந்திருக்கிறார். மேலும், தமது மகத்தான நாமத்தின் மகிமைக்காக வல்லமையான செயல்களைச் செய்யும்படி [______________] அவர்களை அனுப்பியிருக்கிறார்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  பே ஆ்ஃப் பிளெண்டி (Bay of Plenty) பகுதியின் மேல் தேவனுடைய ஆசீர்வாதத்தையும், பரிசுத்த ஆவியின் வல்லமையான ஊற்றுதலையும் அறிவியுங்கள்.
  அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற பாஸ்டர் டென்னிஸ் அக்ரமன், மீனா அக்ரமன், மற்றும் அங்குள்ள மற்ற எல்லா போதகர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி ஜெபியுங்கள்.
  எருசலேமின் சமாதானத்திற்காக ஜெபியுங்கள்.
  இஸ்ரவேலில் ஆவிக்குரிய எழுப்புதல் (Revival) உண்டாகும்படி மன்றாடுங்கள். யூத மக்கள் இயேசு கிறிஸ்துவை வாக்களிக்கப்பட்ட மேசியாவாக ஏற்றுக்கொண்டு, தங்கள் பண்டைய வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றமாக அவரை மகிழ்ச்சியோடு கொண்டாடும்படி ஜெபியுங்கள

## திங்கட்கிழமை, 14 செப்டம்பர்

# நாள் 15





நியாயாதிபதிகள் 6:14–16
அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: “உன்னிடத்தில் இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ மிதியானியரின் கையிலிருந்து இஸ்ரவேலை இரட்சிப்பாய். நான் உன்னை அனுப்புகிறதில்லையா?” என்றார். அதற்கு கிதியோன்: “ஆண்டவரே, நான் எப்படி இஸ்ரவேலை இரட்சிப்பேன்? இதோ, என் குடும்பம் மனாசே கோத்திரத்திலே மிகவும் பலவீனமானது; என் தகப்பன் வீட்டிலே நானே மிகவும் சிறியவன்” என்றான். கர்த்தர் அவனை நோக்கி: “நான் உன்னோடே இருப்பேன்; ஆகையால் நீ மிதியானியரை ஒரே மனிதனை அடிப்பதுபோல முறியடிப்பாய்” என்றார்.

ஜெபம்

- எங்கள் தேவனே, எங்கள் சபை இயக்கம் முழுவதும் ஆவிக்குரிய போராட்டத்தில் உறுதியாய் நிற்கும் விசுவாசம் எழும்பும்படி கிருபை அருளும். “பலங்கொண்டு திடமனதாயிருங்கள்; பயப்படாதீர்கள்; கலங்காதீர்கள்” என்ற உமது அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து வாழ நாங்கள் எங்களை அர்ப்பணிக்கிறோம். நாங்கள் செல்லும் இடமெல்லாம் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களோடு இருக்கிறார் (யோசுவா 1:9; மத்தேயு 28) என்ற உண்மையை எப்போதும் காணும் ஆவிக்குரிய கண்களை எங்களுக்கு அருளும்.
- “எங்களுக்கு விரோதமாக இருப்பவர்களைவிட, எங்களோடு இருப்பவர்கள் அதிகமானவர்கள்” (2 இராஜாக்கள் 6:16) என்ற உண்மையை எப்போதும் உணர்ந்திருக்கும் மனதை எங்களுக்குத் தாரும்.
- பரலோகப் பிதாவே, எங்களைப் பற்றிய எங்கள் குறுகிய எண்ணங்களுக்குள் நாங்கள் எங்களை அடைத்துக்கொண்டதற்காக எங்களை மன்னியும். கடந்த கால அனுபவங்களின் எல்லைகளுக்குள் எங்கள் எதிர்பார்ப்புகளை மட்டுப்படுத்திக்கொண்டதற்காகவும் எங்களை மன்னியும். நாங்கள் மனந்திரும்பி உம்மை நோக்கித் திரும்புகிறோம். நீரார் என்பதையும், எங்களுக்குள் செயல்படும் உமது வல்லமையையும் இன்னும் ஆழமாக அறியும் வெளிப்பாட்டை எங்களுக்கு அருளும்.
- நாங்கள் விசுவாசத்தோடு அறிவிக்கிறோம்: இளம் தலைமுறையினரின் இருதயங்களிலும், வயதானவர்களின் இருதயங்களிலும், ஊழியத்திற்கான துணிச்சலான விசுவாசத்தின் புதிய காலம் எழும்பும். பரிசுத்த ஆவியானவர் அளிக்கும் புதிய வழிநடத்துதல்களுக்கும், புதிய உத்திகளுக்கும், அவருடைய மென்மையான தூண்டுதல்களுக்கும் உடனடியாகக் கீழ்ப்படிகிற தலைமுறையாக நாம் இருப்போம்.
- தேவனுடைய வல்லமை எங்கள் மூலமாக சுதந்திரமாகப் பாய்ந்து, அநேகரின் வாழ்வைத் தொடும். நாங்கள் எங்கள் தேவனைப் பற்றி அறிவிக்கிறோம்: நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆ்ஃப் காட் இயக்கத்தின் பலமும் கேடயமும் கர்த்தரே. அறுவடையின் ஆண்டவரே, 2033 ஆம் ஆண்டிற்கு முன்பாக எங்கள் தாக்கத்தையும் ஊழியப் பரப்பையும் இருமடங்கிற்கும் அதிகமாக விரிவுபடுத்தும் இந்தப் பயணத்தில், இரவும் பகலும் எங்களைக் காத்து, வழிநடத்தி, நடத்துகிறவர் நீரே.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  வைக்காடோ (Waikato) பகுதியின் மேல் தேவனுடைய ஆசீர்வாதத்தையும், பரிசுத்த ஆவியின் வல்லமையான ஊற்றுதலையும் அறிவியுங்கள்.
  அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற பாஸ்டர் லிஸ் பிராண்டன் மற்றும் மற்ற எல்லா போதகர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி ஜெபியுங்கள்.
  எங்கள் நிர்வாகக் குழு உறுப்பினரும், டோங்கா இனக் குழுவின் தலைவருமான பாஸ்டர் அனஹினா சிகாலு மற்றும் அவரது மனைவி வோசைலாங்கி சிகாலு ஆகியோருக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா வழங்குதல்களும், ஞானமும் அருளும்படி மன்றாடுங்கள்.
  எங்கள் டோங்கா சபைகள் அனைத்தின்மேலும் இரட்டிப்பு ஆசீர்வாதத்தை அறிவித்து, புதிய டோங்கா சபை நிறுவுநர்களை (Church Planters) தேவன் எழுப்பி அனுப்பும்படி ஜெபியுங்கள்

செவ்வாய்க்கிழமை, 15 செப்டம்பர்

# நாள் 16




எரேமியா 50:34
“அவர்களுடைய மீட்பர் வல்லமையுள்ளவர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம். அவர் அவர்களுடைய வழக்கை உறுதியாக நடத்தி, அவர்களுடைய தேசத்திற்கு இளைப்பாறுதலை அளிப்பார்; பாபிலோனில் குடியிருக்கிறவர்களுக்கோ கலக்கத்தை உண்டாக்குவார்.”
ஜெபம்

- கர்த்தராகிய இயேசுவே, நீர் எங்களுக்காகச் செய்த அனைத்தையும் நாங்கள் விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்கிறோம். உமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் எங்களைச் சுத்திகரித்ததற்காக உமக்கு நன்றி. எங்கள் உதடுகளை எரியும் தணலால் தொட்டு, எங்களைப் பரிசுத்தப்படுத்தி, உமது ஊழியத்திற்காக பலப்படுத்தினதற்காக உம்மைத் துதிக்கிறோம். நீர் எங்களுக்கு அளித்த அழைப்பையும், அதனுடன் வரும் பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.
- நாங்கள் உமது நாமத்தினால் அழைக்கப்படும் உமது ஜனங்கள். நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் இயக்கமாகிய நாங்கள், எங்களைத் தாழ்த்தி உம்மை நோக்கி ஜெபிக்கிறோம். உமது திருமுகத்தைத் தேடுகிறோம். பூமிக்குரியதும், ஆவிக்குரியதல்லாததும், பிசுக்குரியதுமான எல்லா வழிகளையும் விட்டு மனந்திரும்புகிறோம். மகா இரக்கமுள்ள தேவனே, நாங்கள் ஊழியம் செய்யும்படி நீர் அனுப்பியுள்ள மக்களுக்காக மன்றாடி உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம். பரலோகத்திலிருந்து எங்கள் ஜெபத்தைக் கேட்டு, எங்கள் பாவங்களை மன்னித்து, எங்கள் தேசத்தை மீட்டருளும். எங்கள் ஒவ்வொரு ஜெபத்தையும் கவனமாகக் கேட்க உமது கண்களையும் செவிகளையும் திறந்தருளும்.
- நாங்கள் விசுவாசத்தோடு அறிவிக்கிறோம்: எங்கள் சபை இயக்கத்தின் தலைவர்களுக்கும், எங்கள் தேசத்தின் தலைவர்களுக்கும், மேலிருந்து வரும் ஞானத்தின் ஆவியை தேவன் அருளுவாராக. பரிசுத்த ஆவியானவர் அளிக்கும் அந்த ஞானம், முதலில் பரிசுத்தமானதாகவும், சமாதானத்தை விரும்புகிறதாகவும், எப்போதும் சாந்தமுள்ளதாகவும், மற்றவர்களுக்குக் கீழ்ப்படியத் தயாராக இருப்பதாகவும், இரக்கத்தினாலும் நற்கனிகளினாலும் நிறைந்ததாகவும், பட்சபாதமற்றதாகவும், மனமாறாத உண்மையுள்ளதாகவும் இருக்கும் (யாக்கோபு 3).
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  ஆக்லாந்து (Auckland) பகுதியின் மேல் தேவனுடைய ஆசீர்வாதத்தையும், பரிசுத்த ஆவியின் வல்லமையான ஊற்றுதலையும் அறிவியுங்கள்.
  அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற பாஸ்டர் பினுராஜ், பாஸ்டர் கிரிஸ் சோலா, மற்றும் மற்ற எல்லா போதகர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி ஜெபியுங்கள்.
  எங்கள் இந்திய இனக்குழுவின் தலைவரான பாஸ்டர் பினுராஜ் அவர்களுக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா வழங்குதல்களும், ஞானமும் அருளும்படி மன்றாடுங்கள்.
  எங்கள் இந்திய சபைகள் அனைத்தின்மேலும் இரட்டிப்பு ஆசீர்வாதத்தை அறிவித்து, புதிய இந்திய சபை நிறுவுநர்களை (Indian Church Planters) தேவன் எழுப்பி அனுப்பும்படி ஜெபியுங்கள்.

## புதன்கிழமை, 16 செப்டம்பர்


# நாள் 17




ஏசாயா 41:8-10
“ஆனால், இஸ்ரவேலே, என் ஊழியக்காரனே; நான் தெரிந்துகொண்ட யாக்கோபே; என் சிநேகிதனாகிய ஆபிரகாமின் சந்ததியே, பூமியின் எல்லைகளிலிருந்து நான் உன்னை அழைத்து, அதன் கடையாந்தரங்களிலிருந்து உன்னை வரவழைத்து, ‘நீ என் ஊழியக்காரன்; நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்; உன்னை வெறுத்துவிடவில்லை’ என்று சொன்னேன். ஆகையால் பயப்படாதே; நான் உன்னோடிருக்கிறேன். திகையாதே; நான் உன் தேவன். நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் செய்வேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.”

ஜெபம்

- பரலோகப் பிதாவே, உலகம் முழுவதும் பரவியுள்ள Assemblies of God இயக்கத்தின் மேல் நீர் வெளிப்படுத்திய அற்புதமான உண்மைத்தன்மைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். 2033 ஆம் ஆண்டிற்குள் எங்கள் இயக்கம் இருமடங்காக வளர வேண்டும் என்ற ஒரே தரிசனத்திலும், ஒருமைப்பாட்டிலும் எங்களை நடத்தி வந்த உமது சிறப்பான கிருபைக்காக உமக்கு ஸ்தோத்திரம். இன்று மீண்டும் உம்மை நோக்கி எங்கள் பார்வையை உயர்த்துகிறோம்.
- உலகம் முழுவதும் எங்கள் ஊழியத்தின் தாக்கத்தையும் பரப்பையும் இருமடங்காக விரிவுபடுத்துவதற்கு தேவையான பலத்தையும் விசுவாசத்தையும் எங்களுக்கு அருளும். எங்கள் தேவனே, நாங்கள் முற்றிலும் உம்மையே நம்பியிருக்கிறோம். நாங்கள் நினைத்ததையும், கற்பனை செய்ததையும் விட அதிகமாக நீர் எங்களுக்குள்ளும் எங்கள் மூலமாகவும் செயல்படும்படி வேண்டுகிறோம். உமது வல்லமை எங்கள் நடுவில் வெளிப்படுவதற்காக நாங்கள் ஏங்குகிறோம். எங்கள் இயக்கம் ஆவிக்குரிய எழுப்புதலிலிருந்து (Revival) பிறந்தது என்பதை நினைவுகூர்ந்து உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் தேசத்தை மாற்றுவதற்காக நீர் எங்களை எழுப்பினீர். ஆகையால் இன்று நாங்கள் தைரியமாக அறிவிக்கிறோம்: ஆவிக்குரிய எழுப்புதல் எங்கள் இயக்கத்தின் இயல்பான வாழ்க்கைமுறையாகும். அதிசயங்களும், அற்புதங்களும், பரிசுத்த ஆவியின் அமானுஷ்ய வல்லமையும் எங்கள் அடையாளமாகும். எங்கள் தேசத்தை மாற்றுவதற்கு எங்களைப் பயன்படுத்துமாறு உம்மை நோக்கி கதறி மன்றாடுகிறோம். “பலத்தினாலுமல்ல,  ல்லமையினாலுமல்ல; உமது ஆவியினாலே” (சகரியா 4:6). தேவனே, எங்களை மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பும்!
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  நார்த்லாந்து (Northland) பகுதியின் மேல் தேவனுடைய ஆசீர்வாதத்தையும், பரிசுத்த ஆவியின் வல்லமையான ஊற்றுதலையும் அறிவியுங்கள்.
  அந்தப் பகுதியில் ஊழியம் செய்கிற பாஸ்டர் ஷான் ஃபோஸ்டர் மற்றும் மற்ற எல்லா போதகர்களையும் தேவன் பாதுகாத்து, அபிஷேகம் செய்யும்படி ஜெபியுங்கள்.
  எங்கள் பிஜியன் இனக்குழுவின் தலைவரான பாஸ்டர் சோலோ ஸ்டார்க் மற்றும் அவரது மனைவி வாட்டி ஸ்டார்க் ஆகியோருக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா வழங்குதல்களும், ஞானமும் அருளும்படி மன்றாடுங்கள்.
  எங்கள் பிஜியன் சபைகள் அனைத்தின்மேலும் இரட்டிப்பு ஆசீர்வாதத்தை அறிவித்து, புதிய பிஜியன் சபை நிறுவுநர்களை (Fijian Church Planters) தேவன் எழுப்பி அனுப்பும்படி ஜெபியுங்கள்.




## வியாழக்கிழமை, 17 செப்டம்பர்

# நாள் 18

பிலிப்பியர் 4:12–13
“தாழ்ந்த நிலையில் இருப்பதையும் அறிந்திருக்கிறேன்; வளமாய் வாழ்வதையும் அறிந்திருக்கிறேன். நிறைவிலும், பசியிலும், செழிப்பிலும், பற்றாக்குறையிலும், எல்லா சூழ்நிலைகளிலும் வாழும் இரகசியத்தைக் கற்றுக்கொண்டேன். என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே இவையெல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு.”

ஜெபம்

- பரலோகப் பிதாவே, MM33 தரிசனத்தின் மூலம் நீர் எங்கள் இருதயங்களில் ஊதியுள்ள நோக்கத்தையும் அழைப்பையும் தொடர்ந்து ஏற்றுக்கொள்ள எங்கள் உள்ளங்களைத் திறக்கிறோம்.உலகின் ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள Assemblies of God சபைகள் ஒருமனதாக “ஆம்” என்று பதிலளித்த அந்த ஒற்றுமைக்கும் உடன்பாட்டிற்கும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்தக் குறிப்பிட்ட காலத்தில், உமது உலகளாவிய திட்டத்தில் நாங்களும் ஒரு பங்கைக் கொண்டிருப்பதற்காக உமக்கு நன்றி.
- நகரங்களிலும், ஊர்களிலும், கிராமங்களிலும், உலகின் எல்லா தேசங்களிலும், எங்கள் உலகளாவிய சபை இயக்கத்தை திட்டமிட்டு விரிவுபடுத்துவது எங்களுக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் நலமாகத் தோன்றியது என்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்கள் சபை இயக்கம் முழுவதிலும் கிறிஸ்துவின் சிலுவை உயர்த்தப்படுவதாக நாங்கள் ஜெபிக்கிறோம். உமது அன்பு ஒவ்வொரு அண்டைச் சமூகத்திற்கும் மேலும் மேலும் பெருகி வழிந்தோடுவதாக. ஆவிக்குரிய அறிவிலும், தேவனைப் பற்றிய புரிதலிலும் நாம் தொடர்ந்து வளர்வோமாக.
- நாங்கள் தொடர்ந்து தாழ்மையுடன் வாழும் அந்த நல்ல மண்ணில், உமக்கு உண்மையாக முக்கியமான காரியங்களைப் புரிந்துகொள்ளும் ஞானத்தில் எங்களை வளர்த்தருளும். கிறிஸ்துவின் மறுவருகை நாள்வரை, தூய்மையுடனும் குற்றமற்றவர்களாகவும், உமக்கு உண்மையுள்ளவர்களாகவும் வாழ எங்களுக்கு கிருபை அருளும். பரிசுத்த ஆவியானவரே, நீர் ஊழியத்தின் ஆவியும், வல்லமையின் ஆவியும் ஆவீர்.
- நாங்கள் அனுப்பப்படும் ஒவ்வொரு இடத்திலும் உமது பிரசன்னம் எங்களோடு இருப்பதாக நீர் அளித்த உறுதிக்காக உமக்கு நன்றி. இயேசு கிறிஸ்துவை தைரியமாக அறிவிக்கவும், தேவனுடைய ராஜ்யத்தை வெளிப்படுத்தும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்யவும் எங்களுக்கு புதிய தைரியத்தை அருளும்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  எங்கள் Assemblies of God இயக்கத்தில் உள்ள அனைத்து இளைஞர்களையும், வாலிபர்களையும் தேவனிடம் ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள்.
  ஆட்டியரோவா (நியூசிலாந்து) முழுவதும் “Fearless Generation” (அஞ்சாத தலைமுறை) எழும்புவதாக அறிவியுங்கள்.
  பரிசுத்த ஆவியின் வல்லமையால் எரியூட்டப்பட்டு, இயேசுவின் மீதான அசைக்க முடியாத அன்புடன், எந்த இராட்சதத்திற்கும் முன்பாகப் பின்வாங்காத இளைஞர்களின் சேனை எழும்பும்படி ஜெபியுங்கள்.
  பாஸ்டர் ஜேமி சாப்மேன் மற்றும் ரெபெக்கா சாப்மேன் ஆகியோர் Fearless இயக்கத்தை வழிநடத்துகிறபோது, தேவன் அவர்களுக்கு பரலோகத்திலிருந்து எல்லா ஆசீர்வாதங்களையும் அருளும்படி மன்றாடுங்கள்.
  எங்கள் குக் தீவுகள் (Cook Islands) இனக்குழுத் தலைவரும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான பாஸ்டர் ஆனி தங்கிமதைதி மற்றும் அவரது மனைவி ரீயா தங்கிமதைதி ஆகியோருக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா வழங்குதல்களும், ஞானமும் அருளும்படி ஜெபியுங்கள். எங்கள் குக் தீவுகள் சபைகள் அனைத்தின்மேலும் இரட்டிப்பு ஆசீர்வாதத்தை அறிவித்து, புதிய குக் தீவுகள் சபை நிறுவுநர்களை (Cook Island Church Planters) தேவன் எழுப்பி அனுப்பும்படி மன்றாடுங்கள்.

## வெள்ளிக்கிழமை, 18 செப்டம்பர்

# நாள் 19





**சங்கீதம்** 1:1–3

“துன்மார்க்கரின் ஆலோசனையில் நடவாமலும், பாவிகளின் வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, அவருடைய வேதத்தை இரவும் பகலும் தியானிக்கிற மனுஷன் பாக்கியவான்.

அவன் நீரோடைகளின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைக் கொடுத்து, இலை உதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.”

ஜெபம்

- கர்த்தராகிய இயேசுவே, நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் இயக்கம் இரவும் பகலும் உமது வார்த்தையிலிருந்து பலம் பெற்றுக்கொண்டு வாழும் இயக்கமாக இருக்கும்படி ஜெபிக்கிறோம். எங்கள் சபைகள் அனைத்திலும் ஊழியத்திற்கான புதிய காற்றை நீர் வீசுவீராக என்று அறிவிக்கிறோம்.
- உடைந்துபோன உலகத்திற்குத் தங்கள் பிதாவினால் அனுப்பப்பட்ட தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளும் என்ற அடையாளத்தோடு ஒருவரையொருவர் அறிந்துகொள்ளும் ஜனங்களாக நாம் இருப்போமாக. எங்கள் தேவனே, ஒவ்வொரு நற்செயலிலும் கனிகொடுத்து, ஊழியத்தின் தேவனாகிய உம்மைப் பற்றிய அறிவில் ஒன்றாக வளர வேண்டும் என்று ஏங்குகிறோம்.
- உமது மகிமையான வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் எங்களைப் பலப்படுத்தும். அதனால், நாங்கள் மிகுந்த சகிப்புத்தன்மையுடனும், பொறுமையுடனும், மகிழ்ச்சியோடு உமக்கு நன்றிச் செலுத்துகிறவர்களாக இருப்போமாக. கொலோசெயர் 1-ல் சொல்லப்பட்டபடி, அறுவடைக்கான வேலையாட்களாக எங்களைத் தகுதிப்படுத்தி, ஒளியின் ராஜ்யத்தில் உள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்குகொள்ளச் செய்ததற்காக உமக்கு மகிழ்ச்சியுடன் நன்றி செலுத்துகிறோம்.
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  எங்கள் சாப்ளைன்சி (Chaplaincy) இயக்குநரான பாஸ்டர் பீட்டர் டேட் அவர்களுக்காக ஜெபியுங்கள். பணியிடங்களில் சாப்ளைன்களின் ஊழியத்தை முன்னெடுத்து வழிநடத்தும் அவருக்கு தேவன் புதிய கிருபையையும் வல்லமையையும் அருளும்படி வேண்டுங்கள்.
  எங்கள் இயக்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் பணியிடங்களையே ஊழியக் களமாக காணும்படி, அறுவடையின் ஆண்டவர் அவர்களை எழுப்பி விழிப்புணர்வு அளிக்கும்படி ஜெபியுங்கள்.
  நியூசிலாந்து முழுவதும் பணியிட ஓய்வு அறைகளிலும் (Smoko Rooms), தண்ணீர் குடிக்கும் இடங்களிலும் (Water Coolers) இயேசுவின் நாமம் கிருபையுடனும் அன்புடனும் பகிரப்படும்படி ஜெபியுங்கள். எங்கள் நிர்வாகக் குழு உறுப்பினரான பாஸ்டர் மைக் கோ மற்றும் அவரது மனைவி மிசேல் கோ ஆகியோருக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா வழங்குதல்களும், ஞானமும் அருளும்படி மன்றாடுங்கள். புதிய சபை நிறுவுநர்களையும் (Church Planters), புதிய பகுதிகளைத் திறக்கும் முன்னோடிகளையும் (Pioneers) எழுப்பி அனுப்புவதற்கான கிருபையையும் ஆவிக்குரிய அதிகாரத்தையும் தேவன் எங்கள் இயக்கத்திற்குக் கொடுக்கும்படி ஜெபியுங்கள்.
  எங்கள் கொரிய இனக்குழுத் தலைவரான பாஸ்டர் ஹோ மின் கிம் அவர்களுக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா வழங்குதல்களும், ஞானமும் அருளும்படி மன்றாடுங்கள்.
  எங்கள் கொரிய சபைகள் அனைத்தின்மேலும் இரட்டிப்பு ஆசீர்வாதத்தை அறிவித்து, புதிய கொரிய சபை நிறுவுநர்களை (Korean Church Planters) தேவன் எழுப்பி அனுப்பும்படி ஜெபியுங்கள்.




## சனிக்கிழமை, 19 செப்டம்பர்

# நாள் 20

2 கொரிந்தியர் 12:8-10
“இது என்னைவிட்டு நீங்கும்படியாக நான் மூன்றுமுறை
கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: ‘என்
கிருபை உனக்குப் போதும்; என் பலம் பலவீனத்திலே பூரணமாக விளங்கும்’ என்றார்.
ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படியாக, என் பலவீனங்களைக்
குறித்து மிகவும் மகிழ்ச்சியோடு மேன்மைபாராட்டுவேன். அதினிமித்தம் கிறிஸ்துவுக்காக
பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கடிகளிலும், துன்புறுத்தல்களிலும்,
இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்; ஏனெனில், நான்
பலவீனனாயிருக்கும்போதுதான் பலமுள்ளவனாயிருக்கிறேன்.”
ஜெபம்

- கர்த்தராகிய இயேசுவே, நான் என் முழங்கால்களில் விழுந்து, என் பலவீனத்தைப் பார்த்தும் என்னை நிராகரிக்காமல், “என்னைப் பின்பற்றிவா; நான் உன்னை மனுஷரைப் பிடிக்கிற மீனவனாக்குவேன்” என்று என்னை அழைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்.பரலோகப் பிதாவே, எங்கள் சபை இயக்கம் முழுவதும் பரிந்துபேசும் ஜெபத்தின் ஆவியும், ஆழமான அன்பும் எழும்பும்படி அருளும். எந்தச் சூழ்நிலையிலும், எந்தச் சிரமத்திற்கும் முன்பாகவும், நாங்கள் ஒருவருக்கொருவர் ஜெபிப்பதை ஒருபோதும் நிறுத்தாதவர்களாக இருக்கட்டும்.
- கைகள்வைத்து ஜெபிப்பதன் மூலம் எப்போதும் ஒருவரையொருவர் பலப்படுத்துகிறவர்களாக இருக்கட்டும். கொலோசெயர் 1:9-ல் சொல்லப்பட்டபடி, உமது சித்தத்தைப் பற்றிய அறிவில், ஆவிக்குரிய ஞானத்திலும் புரிதலிலும் ஒருவரையொருவர் நிரப்புமாறு உம்மை வேண்டுகிறோம்.
- பிதாவே, கடந்த காலங்களில் எங்கள் ஜெபமின்மைக்கும், எங்கள் சுயபலத்தை நம்பியதற்கும் எங்களை மன்னியும். பரலோகத்திலும் பூமியிலும் உள்ள முழுக் குடும்பத்திற்கும் பெயர் வழங்குகிற பிதாவாகிய உமக்கு முன்பாக மீண்டும் முழங்கால்படியிடுவது எப்படி என்பதை எங்களுக்குக் கற்றுத்தாரும்.
- எங்கள் இயக்கத்திற்கு புதிய ஜெபக் கிருபையை அருளும். நாங்கள் ஒருவருக்கொருவர் இடைவிடாமல் இவ்வாறு ஜெபிக்கிறவர்களாக இருப்போமாக: “உமது மகிமையின் ஐசுவரியத்தின்படி, உமது ஆவியினாலே உள்ளான மனிதனில் வல்லமையால் அவர்களைப் பலப்படுத்தி, கிறிஸ்து விசுவாசத்தினாலே அவர்களுடைய இருதயங்களில் வாசம்பண்ணுவாராக.” (எபேசியர் 3)
- மேலும் நாங்கள் ஜெபிக்கிறோம்:நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆ..ப் காட் இயக்கம் தேவனுடைய அன்பில் வேரூன்றி, உறுதியாக நிலைநிறுத்தப்பட்டதாக இருக்கட்டும்.உலகம் முழுவதும் உள்ள பரிசுத்தவான்களோடு சேர்ந்து, கிறிஸ்துவின் அன்பு எவ்வளவு அகலமும், நீளமும், உயரமும், ஆழமும் கொண்டது என்பதை அறிந்துகொள்ளும் வல்லமையை எங்களுக்கு அருளும். அறிவால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத அந்த அன்பை அனுபவித்து, தேவனுடைய சகல நிறைவினாலும் நிரப்பப்பட்டவர்களாக நாம் வாழ்வோமாக. (எபேசியர் 3:18-19)
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  எங்கள் தேசிய செயலாளரும், MM33 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான பாஸ்டர் டேரன் காமி மற்றும் அவரது மனைவி ஷேரன் காமி ஆகியோருக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா வழங்குதல்களும், ஞானமும் அருளும்படி ஜெபியுங்கள். எங்கள் தேசிய அலுவலகக் குழுவினரான பாஸ்டர் டேரன், ஆனி, சாரா, எட்வினா மற்றும் ஆஞ்சலா ஆகியோருக்காக நன்றி செலுத்தி, அவர்களை தேவனிடம் ஒப்புக்கொடுத்து மன்றாடுங்கள்.
  எங்கள் சபை இயக்கத்திற்கு அத்தியாவசிய நிர்வாக உதவியையும், தகவல் தொடர்பு பணிகளையும் அவர்கள் மேற்கொள்ளும்போது, தேவன் அவர்களுக்கு கிருபை, ஞானம், பலம் மற்றும் புதிய உற்சாகத்தை அருளும்படி ஜெபியுங்கள்.

## ஞாயிற்றுக்கிழமை, 20 செப்டம்பர்

# நாள் 21

மாற்கு 16:19-20

“கர்த்தராகிய இயேசு அவர்களோடே பேசினபின்பு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் பிரசங்கித்தார்கள்; கர்த்தர் அவர்களோடே கிரியை செய்து, தம்மோடேகூடச் சென்ற அடையாளங்களினால் வசனத்தை உறுதிப்படுத்தினார்.”

ஜெபம்

- கர்த்தராகிய இயேசுவே, நீர் எங்களிடம் ஒப்படைத்த ஊழியப் பொறுப்பை நாங்கள் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம். இப்போது நீர் எங்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறீர் என்பதையும், எங்களுக்காக இடைவிடாமல் பரிந்துபேசுகிறீர் என்பதையும் நினைத்து நாங்கள் மகிழ்கிறோம். நாங்கள் ஆவலோடு, “கர்த்தராகிய இயேசுவே, வாரும்!” என்று உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம். உமது மகிமையான மறுவருகையையும், உமது முழுமையான அரசாட்சியையும் ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.
- உலகத் தோற்றத்திற்கு முன்பே எங்களுக்காக நீர் ஆயத்தப்படுத்திய நற்செயல்களை நிறைவேற்றுவதற்கான புதிய தைரியத்தையும், புதிய வல்லமையையும் எங்களுக்கு அருளும். மீண்டும் நாங்கள் உறுதியாக அறிவிக்கிறோம்: “2033 ஆம் ஆண்டிற்குள் ஆட்டியரோவா (நியூசிலாந்து) முழுவதும் நியூசிலாந்து அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் இயக்கத்தின் தாக்கமும் ஊழியப் பரப்பும் இருமடங்கிற்கும் அதிகமாக விரிவடையும். மேலும், எங்கள் இயக்கம் ஆட்டியரோவாவிற்கும், பிற சபை இயக்கங்களுக்கும் ஆசீர்வாதத்தின் ஊற்றாக இருக்கும்.”
- உள்ளூர் / தேசிய / உலகளாவிய ஊழியத்திற்கான ஜெபக் குறிப்புகள்
  நியூசிலாந்து முழுவதும் இதுவரை காணப்படாத ஆவிக்குரிய எழுப்புதலை (Revival) தேவன் அருளும்படி ஜெபியுங்கள்.
  நியூசிலாந்து கிறிஸ்தவ சபைகள், இயேசு கிறிஸ்து கொடுத்த மகா கட்டளையை முழு பொறுப்போடு ஏற்று, தங்கள் சமூகங்களுக்கும் உலக நாடுகளுக்கும் அனுப்பப்பட ஆவலுள்ள சீஷர்களை உருவாக்கும் சபைகளாக மாறும்படி மன்றாடுங்கள்.
  எங்கள் உலக மிஷன் ஒருங்கிணைப்பாளரான பாஸ்டர் பால் வைட் அவர்களுக்கு தேவன் ஆசீர்வாதம், தைரியம், தேவையான எல்லா வழங்குதல்களும், ஞானமும் அருளும்படி ஜெபியுங்கள்.



“உங்களை இடறிவிழாமல் காக்கவும், தம்முடைய மகிமையின் சந்நிதியில் உங்களை மகிழ்ச்சியோடு குற்றமற்றவர்களாக நிறுத்தவும் வல்லவராகிய ஒரே தேவனும், நம்முடைய இரட்சகருமான அவருக்கே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம், எல்லாக் காலங்களுக்கும் முன்பாகவும், இப்பொழுதும், என்றும் மகிமையும், மேன்மையும், வல்லமையும், அதிகாரமும் உண்டாவதாக. ஆமென்.” யூதா 1:24–25

## Feedback - Suddenly God

*Because of Prayer, God is moving in SUDDENLIES! Share your ‘Suddenly God answers’ with us to Encourage, Build and Strengthen our Movement and each other. Thank you for praying together with us for 21 Days. Email us at agnznationalprayer@gmail.com*

## Seedtime and Harvest

*Our goal is to raise up an eco–system of 24/7 prayer throughout the movement in New Zealand and Oceania. Every mission has costs attached. We are careful stewards and invite you to sew into the work that God is leading us to facilitate and say YES to. Thank you Account details: Assemblies of God NZ Inc. 03–0196–0120003–001*

## Website

*Website:– To learn more, find resources and get translations of this Guide in other languages, go to www.agnz.org/prayer–initiative*